# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 7 திங்கட்கிழமை (21-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:176


## கொழும்பில் ஆள் கடத்தல்

கொழும்பு,மே21

கிழக்கிலங்கைப் போக்குவரத்துச் சபையின் நடத்துநர் ஒருவர் கொழுமபு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு கடத்தப்பட்டுள்ளார்.

பழுகாமத்தைச் சேர்ந்த கைலாய பிள்ளை நடேசபிள்ளை என்ற அந்த நடத்துநர் வேலை நிமித்தம் அங்கு தங்கியிருந்தார் என்றும் -

ஓட்டோவில் வந்த இனந்தெரியாதவர்கள் இவரைக் கடத்திச் சென்றனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

## விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து அரசு பரிசீலனை!

கொழும்பு,மே21

விடுதலைப் புலிகள் மீதான தடை விவகாரம், தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருப்பதை அடுத்து -

புலிகள் மீதான தடையை நீககுவது குறித்து அரசாங்க உயர் மட்டத்தில் ஆராயப்படுவதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசு - விடுதலைப் புலிகளுக்கு இடையிலான நேரடிப் பேச்சுக்களில் அரசு சார்பில் பங்குபற்ற நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் குசும் பாலபட்டபெண்டி ஆகியோர் இந்த விவகாரம் குறித்துக் கூடி ஆராய்ந்தனர் என்றும் -

அதன் பின்னர், தடை நீக்கப்படுவதால் உருவாகும் சாதக, பாதக நிலைகள் குறித்து ஜனாதிபதியுடன் அவர்கள் கலந்துரையாடினர் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விவகாரம் குறித்து ஒரு தீர்க்கமான முடிவு எட்டப்பட்ட பின்னர் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் தேடுதல்

மட்டக்களப்பு,மே21

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பகுதி நேற்றுக் காலை 5மணிக்குப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

தாளங்குடாவில் உள்ள தேவாலயத்தில் அந்தப் பிரதேச மக்கள் யாவரையும் கூடுமாறு உத்தரவிட்ட படையினர், மக்களைத் துருவித் துருவி விசாரணை செய்தனர்.

பிற்பகல் 1 மணி வரை இந்தத் தேடுதல் இடம்பெற்றது.

(உ-3-21)

# சமாதான முயற்சிகளில் பின்னடைவு தீவிர யுத்தத்துக்கு வழி செய்துள்ளது!

## இராணுவ ஆய்வாளர் எச்சரிக்கை

கொழும்பு,மே21

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டை நிலை யுத்தம் தீவிரமடைவதற்கு வழி செய்யும். - இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ்.**

'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் தாம் வரைந்த பாதுகாப்பு நிலைவரம் பற்றிய கட்டுரையிலேயே அவர் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கட்டுரையில் அவர் தெரிவித்த கருத்துக்களின் சாராம்சம் வருமாறு:-

விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வனின் வாகன அணி மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஸ்ரீலங்கா இராணுவம் மீது புலிகள் குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் இராணுவப் பேச்சாளர் அதை மறுத்துள்ளார்.

அப்படியானால் யார் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பு? பல கதைகள் அடிபடுகின்றன. புலிகளை எதிர்க்கும் தமிழ்க் குழுக்கள் மீது சிலர் குற்றம் சுமத்துகின்றனர். புலிகளின் மைய நிலையம் என்று கருதப்படும் பிரதேசத்துக்குள் ஊடுருவி அவர்களால் தாக்குதல் நடத்த முடியுமா? புலிகளே இந்தச் சம்பவத்தை செய்திருப்பார்கள் என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் ஒரு நிகழ்வை பாவனை பண்ணிக் காட்டுவதற்கு தங்கள் உறுப்பினர் ஒருவரின் உயிரை அவர்கள் பறித்தெடுப்பதற்கு வாய்ப்புகள் மிகக் குறைவு.

புதன்கிழமை பிற்பகல் தேசிய பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்துக்கு தலைமை வகித்த ஜனாதிபதி குமாரதுங்கவுக்கே இந்தத் தாக்குதல் பற்றிய தகவல் பேரதிர்ச்சியைத் தந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## 18 ஈழத்தமிழர்களை பிரிட்டன் நாடு கடத்தும்!

கொழும்பு,மே21

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட 18 ஈழ அகதிகளை நாடு கடத்த அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் பணியை குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் துரிதமாக்கியுள்ளனர் என்றும் -

முதற் கட்டமாக 18 ஈழத்தமிழர்களின் விண்ணப்பங்கள் அவர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன என்றும் -

18 பேரையும் இலங்கைக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## ஹொரவப்பொத்தானையில் மோதல் சம்பவம்

கொழும்பு,மே21

ஹொரவப்பொத்தானை - நாகலடி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவம் ஒன்றில் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்தார்; மேலும் 4 பொலீஸார் காயமடைந்தனர்.

- செய்தி ஏஜென்ஸி ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டது.

இதேவேளை -

அம்பாறை - பொத்துவில் பகுதியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் வரவேண்டும் என்பதற்காக திடீரென யுத்தநிறுத்தம் செய்ய அரசாங்கம் தயாராக இல்லை

### பிரதமர் ரத்னசிறி கூறுகின்றார்

கொழும்பு,மே21

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக திடீரென யுத்தத்தை நிறுத்துவதற்கு அரசு தயாரில்லை என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பண்கொடை விகாரையில் நடந்த வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்பாகப் பலரும் பல்வேறு கருத்துக்களைக் கூறிவருகின்றனர். ஆனால அரசாங்கம் சமாதானம் எனக் கூறிக்கொண்டு உடனடியாக யுத்தத்தை நிறுத்த ஒருபோதும் இணங்காது.

யுத்தம் என்பது போர்வீரர்களுக்கானது மட்டுமல்ல. இந்த நாட்டில் வாழுகின்ற வர்த்தகர்கள் உட்பட சகல தரப்பினருக்கும் யுத்தத்தில் பங்கு உண்டு என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. - என்றார் அவர்.

(உ-3-6-9)

## புளொட் உறுப்பினர்கள் இருவர் கடுமையாகத் தாக்கப்பட்டனர்

### வவுனியாவில் சனி இரவு சம்பவம்

வவுனியா,மே21

வவுனியா முதலியாகுளத்தில் உள்ள 'புளொட்' அமைப்பின் முகாமுக்குச் சமீபமாக வைத்து -

கறுப்புத் துணியால் முகத்தை மூடிக் கட்டியிருந்த இனந்தெரியாத குழு ஒன்று அந்த அமைப்பின் இரு உறுப்பினர்களைக் கடுமையாகத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் மாலை இவர்கள் இருவரும் வெளியில் சென்றுவிட்டு, முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்தவேளையிலேயே அவர்கள் மீது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. என்றும் -

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த காண்டீபன் (வயது 23), கண்ணா என அழைக்கப்படும் பத்மநாதன் (வயது24) ஆகிய இருவரும் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் -

புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலை ரெலோ அமைப்பினர் மேற்கொண்டனர் என்று புளொட் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை ரெலோ மறுத்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(உ-3-164)

## கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்கள் 20 பேர் சிறையில் உண்ணாவிரதம்!

கொழும்பு,மே21

கொழும்புச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 20 வெளிநாட்டவர்கள் தமக்கு எதிரான வழக்குகளின் விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

அமெரிக்கா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 20பேர் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

உணவு அருந்தாமல் நீரை மட்டும் அருந்தி இந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். (உ-3-6)

## 5கிலோ கண்ணி வவுனியாவில் மீட்பு!

கொழும்பு,மே21

வவுனியா மாவட்டத்தில் கோயில் புளியங்குளம் வீதியில் நேற்று முன்தினம் வீதி ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த படையினர் ஐந்து கிலோ நிறையுடைய கண்ணிவெடி ஒன்றை மீட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

படையினர் பாவனையில் உள்ள இந்த வீதியில் படையினரை இலக்கு வைத்தே இந்தக் கண்ணிவெடி புதைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

(உ-3)

## லொறியிலிருந்து ஆயுதங்கள் மாளிகாவத்தையில் மீட்பு!

கொழும்பு,மே21

கொழும்பு மாளிகாவத்தையில் உள்ள 'கராஜ்' ஒன்றில் திருத்த வேலைக்கு நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றில் இருந்து கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று மருதானைப் பொலீஸார் தெரிவித்தனர்.

இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் பிரஸ்தாப லொறியைத் தாங்கள் சோதனை செய்ததாகவும் -

அச்சமயம் அதிலிருந்து பல கைக்குண்டுகள், கைத்துப்பாக்கிகள் உட்பட பல ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

தலைமறைவாகியுள்ள, பிரஸ்தாப லொறியின் சாரதியைத் தேடித் தாங்கள் வலைவிரித்துள்ளதாகவும்-

'கராஜ்' உரிமையாளர் உட்பட பலர் விசாரிக்கப்பட்டு வருவதாகவும்-

பொலீஸார் மேலும் கூறினர்.

## யுத்தத்தினால் மக்கள் களைத்துப்போய்விட்டனர்

### தூதுவர் மங்கள முனசிங்க கூறுகின்றார்

லண்டன்,மே21

"யுத்தத்தினால் இலங்கை மக்கள் களைத்துவிட்டனர். எனவே யுத்தத்தை நிறுத்தி பேச்சை ஆரம்பிக்க நல்ல தருணம் இப்போது உருவாகியுள்ளது." - என்று பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க தெரிவித்துள்ளார்.

லண்டனில் இலங்கை மாணவர் சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கையில் எல்லோருமே இந்த யுத்தத்தால் துன்பப்படுகின்றார்கள். இதனால் யுத்தத்தையே அனைவரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கூட்டணித் தலைமையின் அனுமதியுடனேயே இணைப்புக் குழு கூட்டத்தில் பங்குபற்றினேன்!

## மேயர் ரவிராஜ் விளக்கம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடத்தின் அனுமதியுடனும் யாழ்.நகரில தங்கியுள்ள கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசியுடனுமே இணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றினேன்.

யாழ்.மேயர் என்.ரவிராஜ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு - அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இணைப்புக் குழுச் கூட்டததில் யாழ்மேயர் ரவிராஜ், துணை முதல்வர் செல்லன் கந்தையன், வலி - வடக்குப் பிரதேச சபைத்தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

யாழ்.மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தை யாழ்.செயலகத்தில் நடத்தாமல் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு அலு வலகத்தில் நடத்தினால் அதில் பங்கு பற்றுவதில்லை என்று கூறி கூட்டணி யின நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் அக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இது தொடர்பாக 'கூட்டணி எம்.பிக்களுக்கு மாறாக இணைப்புக் குழுக கூட்டத்தில் மேயர் ரவிராஜ் கலந்து கொண்டார், என்ற தலைப்பில் கடந்த சனியன்று உதயனில் செய்தி வெளியாகி இருந்தது.

அச்செய்தி தொடர்பாக மேயர் ரவிராஜ் மறுப்பு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 19-05-2001 உதயனில் பக்கம் 14 இல் வெளிவந்த செய்தியானது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும். இப்பிழையான தகவல்களைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளேன்.

அண்மையில் வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் இரண்டு வெவ்வேறு கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. முதலாவது கூட்டம் 2001ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக கூட்டப்பட்ட கூட்டத்திற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தை யாழ்.அரச அதிபர் செயலகத்தில் நடத்த வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் ஏனைய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாக கோரினர்.

இந்தக் கோரிக்கையானது தமிழர் விடுதலைக்கூட்டணி கட்சி ரீதியாக முன் வைத்த ஒரு கோரிக்கையல்ல; நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி எடுத்த ஒரு முடிவாகும்.

இரண்டாவது கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமாகும். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு வடக்கு - கிழக்கு ஆளுநர் மற்றும் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றன.

இந்தக்கூட்டத்திற்கு மாநகர முதல்வர், நகரசபைத் தலைவர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு வடக்கு - கிழக்கு மாகாண சபையினாலும் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினாலும் செய்யப்படுகிறது.

'றான்' நிறுவனமும் இதன் கீழ் இயங்குவதினாலும் -

யாழ்.மாநகரசபையின் நிலைமையையும், நிதி பற்றாக்குறையையும், மாநகரசபையின் நிர்வாகத்தில் அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவதைப் பகிரங்கப்படுத்த வேண்டிய கடப்பாடு யாழ்.மாநகர முதல்வர் என்ற முறையில் எனக்கு இருப்பதினாலும் -

மேலும் மாநகரசபை நிதி ஒதுக்கீடு தொடர்பாக வேண்டிய கோரிக்கைகள் வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்பாக முன்வைக்க வேண்டும் என்ற காரணத்திற்காகவும் -

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எனது கட்சியின் தலைமைப்பீடத்தின் அனுமதியுடனும், தற்போது யாழ்நகரில் தங்கியுள்ள யாழ். மாவட்ட கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசீர்வாதத்துடனும் நானும் பிரதி முதல்வரும் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவி திருமதி பா.ஸ்ரீபாஸ்கரனும் கலந்து கொண்டோம் - என்று ரவிராஜ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஐ)

## மக்கள் குறைகேள் சேவையின்போது

# முன்வைக்கப்பட்ட 9,622 முறைப்பாடுகளில் 3,107 முறைப்பாடுகளுக்கு உடன் தீர்வு

## முயற்சி பெருவெற்றி என்கின்றார் தவராஜா எம்.பி.

யாழ்ப்பாணம்,மே21

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு- கிழக்குத் தமிழ் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த இரு நாள்களாக யாழ்.நகரில் நடத்தப்பட்ட குறைநிவர்த்தி சேவையில் 3 ஆயிரத்து 107 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.தவராஜா யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற குறைநிவர்த்தி சேவையை நேற்று மாலை 4.மணிக்கு முடித்து வைத்த பின் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய போது கூறினார்.

யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

இந்த குறைநிவர்த்தி சேவையில் 9 ஆயிரத்து 622 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றில் பொருத்தமற்றதாகக் காணப்பட்ட 65 முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டன.

6 ஆயிரத்து 350 முறைப்பாடுகள் விரைவில் தீர்வு காணும் பொருட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் தமது அலுவலகங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இந்தச் சேவையில் முதல் நாளீ அமர்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவை 1850 பேர் சந்தித்தனர்.

இரண்டாயிரத்து 600 பேர் அமைச்சரைச் சந்திப்பதற்குப் பதிவு செய்துள்ள போதும் ஜனாதிபதியின் விசேட அழைப்பின் பேரில் அமைச்சர் பகல் 2.30 மணியளவில் கொழும்புக்குச் சென்றமையால் இந்தச் சந்திப்பு இடைநிறுத்தப்பட்டது. அமைச்சரைச் சந்திப்பதற்குப் பதிவு செய்தவர்கள் எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை அமைச்சு அலுவலகத்தில் வைத்து அவரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டுப் பெறுவதற்கு அதிகமானோர் பதிவு செய்துள்ளதால் இச் சேவை மாலை 4.மணியுடன் நிறுத்தப்பட்டு திங்கள் செவ்வாய்க் கிழமைகளில் யாழ் செயலகத்தில் வைத்து இச் சேவையினைத் தொடர்ந்து நடதுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறை நிவிர்த்தி சேவை இடம் பெற்ற இருநாள்களும் 2ஆயிரத்து 361 தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களும் 240 கடவுச் சீட்டு விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்விண்ணப்பங்கள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு இருவாரங்களின் பின் அடையாள அட்டை, கடவுச்சீட்டு போன்றவை உரிய முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 200 மாணவர்கள் அமைச்சரைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

லங்கா சிமெந்து நிறுவனத்தைச் சேர்ந்த 300 ஊழியர்களுக்கு 5மாதச் சம்பளமும் -

சுன்னாகம் சபாபதி நலன்புரி முகாமிலுள்ள 10 குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதமும் -

தென்னை அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த 20 ஊழியர்களுக்கு 3 மாதச் சம்பளமும் -

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இந்தக் குறைநிவிர்த்தி சேவையில் வைத்து வழங்கப்பட்டது.

இதேவேளை மயிலிட்டியைச் சேர்ந்த 80 குடும்பங்கள் அமைச்சரை நேரில் சந்தித்ததை அடுத்து தலா ஆயிரம் ரூபா வீதம் இவர்களுக்கு உதவி வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விருப்பத்தின்படி நடைபெற்ற மக்கள் குறைநிவிர்த்தி சேவை நாம் எதிர்பார்த்ததைவிட பெரு வெற்றியை அளித்துள்ளது என்று அவர் கூறினார்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்சிவதாசன், வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினார்கள்.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு தமிழ் விவகார அமைச்சின் செயலாளர் எஸ்.ரகுநாதன் நன்றியுரை வழங்கினார். (உ-5)

# பெற்றோல் தட்டுப்பாடு இன்றுடன் நீங்கும்!

யாழ்ப்பாணம்,மே21

குடாநாட்டில் கடந்த சில நாள்களாக நிலவிய பெற்றோல் தட்டுப்பாடு இன்று தொடக்கம் நீங்கி விடும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பிலிருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் லீற்றர் பெற்றோலுடன் கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இக்கப்பலில் இருந்து இறக்கப்பட்ட பெற்றோலில் 85 ஆயிரம் லீற்றர் பெற்றோல் குடாநாட்டிலுள்ள 17 எரிபொருள் நிலையங்களுக்கு நேற்று விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இந்த எரிபொருள் நிலையங்களில் இன்று முதல் பெற்றோல் விநியோகிக்கப்படும் என்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (உ-5-17)

## தொழிற் பயிற்சி கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே21

வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளரினால் நடததப்படும் தொழிற்பயிற்சிக் கருத்தரங்கு நாளை செவ்வாய்க் கிழமை காலை 10.மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபை, பனை அபிவிருத்திச் சபை, யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, தொழில் நுட்ப நிறுவனம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், யு.என்.ஏச்.சி.ஆர், பட்டினிக்கு எதிரான நிறுவனம் ,'கெயர்' ஐ.நா.அபிவிருத்தித் திட்டம் போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ்.இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் கடந்த சனியன்று இடம்பெற்றது. வைபவத்தின் ஆரம்பத்தில் மாணவன் ஒருவர் கடவுள் வணக்கம் செலுத்துவதை முதலாவது படத்தில் காணலாம். இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா, கல்லூரி அதிபர் எஸ்.சிறிகுமார் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

மாணவன் ஒருவருக்கு திருமதி தில்லைநடராஜா பரிசில்கள் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். கல்லூரி ஆசிரியர் எஸ்.கிருஷ்ணகுமாரும் காணப்படுகின்றார். (ஐ-3)



காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

விருந்தினர்களாகக் கலந்து கொண்ட காரைநகர் ப.நோ.கூ.சங்கத் தலைவர் பி.பாலசுப்பிரமணியம், ஊர்காவற்றுறை கோடடக்கல்வி அதிகாரி எஸ்.இரத்தினசிங்கம், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் பாடசாலை அதிபர் எ.குமரேசமூர்த்தி உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.



சுதுமலை சின்மய பாரதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

உதவிக் கல்விப்பணிப்பாளர் க.தனபாலசிங்கம், கௌரவ விருந்தினர் இ.தங்கப்பிரகாசம் மற்றும் பிரதம குருக்கள் நகுலேஸ்வரசர்மா ஆகியோருடன் வித்தியாலய அதிபர், உப அதிபர் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ)



நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் செல்வி யோ.செ.வஸ்தியாம்பிள்ளை உரையாற்றுகிறார். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சட்டத்தரணி க.கேசவன், திருமதி சி.கேசவன், உதவிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம், விளையாட்டுச் செயலாளர் தி.ரவீந்திரநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# யாழ். மாநகர சுகாதார சேவைகள் முன்னரை போன்று நடைபெற உதவுக

## பாதிக்கப்பட்ட ஊழியர் மாநகர உறுப்பினர்களுக்கு மகஜர்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார சேவைகள் கடந்த நான்கு மாதங்களாக ஸ்தம்பிதமடைந்துள்ளன. அவை முன்னரைப் போன்று சீராக நடைபெறுவதில் உள்ள தடங்கல்களை நீக்கி, நோய்கள் பரவும் ஆபத்தைத் தடுக்குமாறு—

பாதிக்கப்பட்ட சுகாதார ஊழியர்களின் செயற்பாட்டுக் குழு யாழ். மாநகர முதல்வருக்கும், உறுப்பினர்களுக்கும் அனுப்பிய மகஜரில் கோரியுள்ளனர்.

அந்த மகஜரின் முழு விபரமும் வருமாறு:-

கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் — இரண்டு மாதங்களுக்கு மேலாக— நாம் வழங்கி வந்த சுகாதார சேவைகள் தடைப்பட்டுள்ளன. அதன் விளைவாக குழந்தைகள், சிறுவர்கள், கர்ப்பவதிகளின் சுகாதார நிலை பாதிக்கப்பட்டுள்ளது. கருச் சிதைவுகள், பிண்டச் சிதைவுகள், தாய் மரணம், செப்ரிசிமியா மரணங்கள் அதிகரித்துள்ளன. உரிய நேரத்தில் கொடுக்கப்பட வேண்டிய தடை மருந்துகள் கொடுபடாமல் இருக்கின்றன. அதன் விளைவாக பிள்ளைகளுக்கு ஏற்படும் கொடிய தொற்று நோய்கள், பரவும் ஆபத்து கூடி வருகின்றது. போசாக்கு நிலையங்கள் 15-03-2001 இல் இருந்து பூட்டப்பட்டு இருக்கின்றன. முந்திய ஆணையாளரின் செயற்பாடுகளினால் — எமது சுகாதார வைத்திய அதிகாரியும், நாமும் கடமை செய்ய விடாது தடுக்கப்பட்டு — 15-03-2001தொடக்கம் இதுவரை சிகிச்சை நிலைய சேவைகளை முறையாக வழங்க முடியாமல், நிலையங்கள் நாம் அணுகாதவாறு பூட்டி வைக்கப்பட்டுள்ளன. தகைமையற்ற — பயிற்றப்படாத — தற்காலிக ஊழியர்களை அவர் நியமித்துள்ள போதிலும் சேவைகளை வழங்க முடியாது இருக்கும் நிலையை தாங்கள் அறிவீர்கள்.

முன்னான் தற்காலிக ஆணையாளர் தணிகாசலம், ஆளுநரினால் 01-05-2001 முதல் மாற்றப்பட்டு புதிய ஆணையாளர் இராமலிங்கம் 15-05-2001 முதல் நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ளார்.

### விசாரிக்கப்பட்டுள்ள விடயங்கள்

விசாரணை உத்தியோகத்தரினால் தணிகாசலத்துக்கு எதிராக ஆராயப்பட்ட காரணிகளாவன:

1. பிழையான, உண்மைக்குப் புறம்பான தகவல்களை கௌரவ முதல்வருக்கும் பிரதி முதல்வருக்கும் சபை அங்கத்தவர்களுக்கும் மற்றும் பத்திரிகைகளுக்கும் சுகாதார வைத்திய அதிகாரி பற்றியும் எம்மைப் பற்றியும் வழங்கப்பட்டன. உதாரணத்துக்கு எமது சுகாதார வைத்திய அதிகாரி சபைக் குழுக் கூட்டங்களிலும், பொதுக் கூட்டங்களும் கலந்து வழங்கிய ஆலோசனைகள் பற்றி ஒரு தொடர் நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தது.

2. வளமையான கணக்காய்வாளரின் கேள்வி வினாக்களுக்குப் பதில் கூற வேண்டியது கணக்காளரும் அவருடைய பகுதியுமே. இந்தக் கேள்வி வினாக்களை துஷ்பிரயோகம் செய்து எமக்கும் சுகாதார வைத்திய அதிகாரிக்கும் எதிராகப் பிரசாரம் செய்தமை.

3. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தினால் 1999 ஆம் ஆண்டு சுகாதாரப் பகுதிக்கென வழங்கப்பட்ட வாகனத்தைத் தமது பாவனைக்கு அவர் கேட்டபோது கொடுக்க மறுத்ததினால், பழிவாங்கும் நோக்குடன் வாகனச் சாரதி மற்றும் தொழிலாளிகளை வேலை நீக்கம் செய்தமையும், இது பற்றிய தவறான தகவல்களை முதல்வருக்கும், அங்கத்தவர்களுக்கும் வழங்கியமை.

4. முன்னாள் ஆணையாளர் பாலசிங்கம் காலத்தில் கணக்காய்வாளரினால் கேள்வி எழுப்பப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிக்கு தொடர்பு இல்லாத விடயங்களை வைத்து அவருக்கு வழங்கப்பட வேண்டிய வேதனங்களை 2001 தை மாதம் தொடக்கம் இதுவரை நிறுத்தி வைத்துள்ளமை.

5. இதுவரைக்கும் எம்மில் 41 பேரின் கடந்த பெப்ரவரி மாதம் 2001 தொடக்கம் இன்று வரை கொடுப்பனவுகள் வழங்கப்படாமல் இருக்கின்றன. ஆனாலும் நாம் தொடர்ச்சியாக எமது வெளிக்களக் கடமைகளை சுகாதார வைத்திய அதிகாரி வழிகாட்டலின் கீழ் செய்து வருகின்றோம். அதற்குச் சாட்சியாக உத்தியோகபூர்வமான வரவுப் பதிவேடு எம்மிடம் நாம் சேவையாற்றும் நிலையத்தில் இருக்கின்றது.

### கட்டாய லீவில் அனுப்பியது

6. சுகாதார வைத்திய அதிகாரியைக் காரணம் இல்லாது 15-03-2001 தொடக்கம் கட்டாய லீவில் அனுப்பியதும் அவரையும் எம்மையும் 19-03-2001 தொடக்கம் சிகிச்சை நிலையத்துக்கும் காரியாலயத்துக்கும் செல்ல விடாது தடை ஏற்படுத்தியமையும் 17-03 2001 சனிக்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி ஏற்பாட்டில் பிரதி முதல்வர் திரு. கந்தையன், சபை அங்கத்தவர்கள் எட்வேட், கனகரட்ணம் அவர்களை நாம் அனைவரும் சந்தித்து ஒரு புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு வந்து 19-03-2001 தொடக்கம் வழமையான சேவைகளை வழங்கவும் எமது வேதனங்களைத் தரவும் ஏற்பாடாகி இருந்தது. இதை அறிந்து கொண்ட தணிகாசலம் இரவோடு இரவாக 18-03-2001 மாலையில் பாதுகாப்புப் பகுதிக்கு மேற்குறிப்பிட்ட உடன்பாட்டை நடைமுறைப் படுத்துவதைத் தடை செய்யும் விதத்தில் செயற்பட்டார் (இதற்கான சான்றுகள் எம்மிடம் உள்ளன.) சுகாதார வைத்திய அதிகாரியை நியமித்தது திருகோணமலையில் உள்ள பொதுச்சேவைகள் ஆணைக்குழு. அவருடைய ஒப்பந்தம் 31-12-2001 இல் பூர்த்தி அடைகின்றது. இதற்குமாறாக திரு தணிகாசலம் செயற்பட்டுள்ளார்.

7 மேற்குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாகச் சட்டத்திற்கு முரணான வகையில் தணிகாசலம் செயற்பட்டபடியால் இதுபற்றி மாவட்ட நீதிபதிக்குச் சுகாதார வைத்திய அதிகாரியாலும் எம்மாலும் முறையீடு செய்யப்பட்டு அதற்கான நீதி விசாரணை 20ஆம் திகதி நடைபெற்றது. அதில் சுகாதார வைத்திய அதிகாரியும் நாமும் தணிகாசலம் மற்றும் பிரதி முதல்வர் திரு. கந்தையனும் பங்குபற்றினோம். விசாரணை முடிவில் நீதிபதி விக்னராஜாவினால் எடுத்துரைக்கப்பட்ட சில தீர்மானங்களை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

இதை நடைமுறைப்படுத்தி இருந்தால் சுகாதார சேவைகள் மீண்டும் திறம்பட இயங்கியிருக்கும். ஆனால் மறுநாளே தணிகாசலம் மாவட்ட நீதிபதியின் கட்டளைக்குப் பணியாமல் அதை உதாசீனம் செய்து சட்டத்திற்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளை தொடர்ந்தார்.

### சேவைகள் ஸ்தம்பிதம்

8. மேற்குறிப்பிட்ட நிலைமை காரணமாக 19-03-2001 தொடக்கம் சேவைகள் குழப்பப்பட்டு ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இதன் காரணமாகத் தடுக்கக்கூடிய நோய்கள், மரணங்கள் கூடி வருகின்றன.

9. சட்டத்திற்கும் வழமையான சுகாதார சேவைகளுக்கும் அப்பாற்பட்ட விதத்தில் சுகாதார சேவையைக் கூறு போட்டுக் குழப்பும் வகையில் தகைமை இல்லாத உதவி வைத்தியர்கள். தாதி உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் தற்காலிக பயிற்றப்படாத ஊழியர்களையும் பயன்படுத்தி மக்களுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் வகையில் ஒரு போலிச் சுகாதார சேவையை நடத்த எத்தனித்தமை.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். மேற்குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாக ஒரு விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டு 11-04-2001 அன்று விசாரணை நடந்தது. அதன் காரணமாக ஆளுநரினால் முதற்கட்டமாகத் தணிகாசலம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அடுத்து எமது பிரச்சினை பற்றியும் சுகாதார வைத்திய அதிகாரிக்கு எதிராகத் தணிகாசலத்தினால் எடுத்த சட்டத்திற்கு அப்பாற்பட்ட நடவடிக்கை சம்பந்தமாகவும் ஆராயப்பட்டு ஆளுநரின் தீர்மானங்கள் இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அதை எதிர்பார்க்கின்றோம்.

### நோய்கள் பரவும் ஆபத்து

இந்த முடிவுகள் வரும்வரை காத்திருந்தால் மேலும் சுகாதார சேவைகள் சீரழிந்து மக்களின் சுகாதாரம் மேலும் பாதிப்படைந்து தவிர்க்கக் கூடியமரணங்கள். நோய்நிலைகள் ஏற்படலாம். மீண்டும் யுத்த நிலை மோசமடைந்தால் ஒரு கட்டுக் கோப்பான சுகாதார நிலை இல்லாவிட்டால் நோய்கள் பரவும் ஆபத்து கூடும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

இதை நாங்களும், சுகாதார வைத்திய அதிகாரியும் நன்கு ஆலோசித்த பின் 19-5-2001 நாமாகவே முதல்வரை வெவ்வேறாக சந்தித்து மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக உடனடியாக வேலைகளுக்கு சமுகமளித்து எமது கடமைகளை முழுமையாக்கி சிகிச்சை நிலைய சேவைகளை ஆரம்பிக்க ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் சபையின் முதல்வர் புதிய, ஆணையாளருடனும் சபையுடனும் கலந்தாலோசித்து பூட்டப்பட்ட சிகிச்சை நிலையங்களை, போசாக்கு நிலையங்களை திறந்து எமக்கு வழங்கப்பட்ட வேலை நீக்க, கட்டாய லீவு கடிதங்களை வாபஸ் பெறுமாறு கேட்டுள்ளோம்.

எமது பிணக்குகளை ஆளுநரின் கடிதம் வரும்வரை காத்திராமல் நாமே கடமை ஏற்ற பின்னர் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று அறிவித்துள்ளோம்.

புதிய ஆணையாளர் இராமலிங்கம்ஓர் அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர். அவரின் ஒத்துழைப்புடன் எமது தடைப்பட்டிருக்கும்சுகாதாரசேவை, முன்னாள் ஆணையாளர் பாலசிங்கம் காலத்தில் 12 வருடமாக எவ்வாறு ஒரு சிறந்த முழுமையான சேவையாக திகழ்ந்ததோ அந்த நிலைக்கு வெகு விரைவில் நாமும் எமது சுகாதார வைத்திய அதிகாரி வை. க. இ. தெய்வேந்திரனுடன் இணைந்து வழங்குவோம் என்று உறுதி கூறுகின்றோம்.

எதிர்வரும் திங்கள் (இன்று) நடக்கவிருக்கும் பொதுச்சபை கூட்டத்தில் மேற்கூறிய விடயங்களை கவனத்தில் எடுத்து தாங்கள் அனைவரும் தீர்மானம் எடுத்து, எமக்கு முன்னாள் ஆணையாளரினால் ஏற்படுத்தப்பட்டிருந்த தடைகளை நீக்கி 22-05-2001 முதல் நாம் எமது கடமைகளை முழுமையாக்கி சேவைகளை 15-03-2001க்கு முன்னர் இருந்தவாறு வழங்க உதவுவீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இந்த வேண்டுகோளை எமது மக்களின் நன்மை கருதி நாம் சமர்ப்பிக்கின்றோம். (அ)

# சிங்கள மக்களுடன் ஒப்பிடுகையில் தமிழரிடம் வாசிப்புப் பழக்கம் குறைவு

## 'கணிப்பொறி' நூல்வெளியீட்டு விழாவில் உரை

குருநகர், மே 21

சிங்கள மக்களுடன் ஒப்பிடுகையில் தமிழரிடையே வாசிப்புப் பழக்கம் குறைவாகவே காணப்படுகிறது. இது ஆய்வு ஒன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. வாசிக்கும் ஆர்வம் எம்மிடையே ஏற்படாத வரை இது போன்ற பயன்தரும் நூல்கள் வெளிவருவதும் கடினமே.

யாழ் வேம்படி மகளிர்கல்லூரியில் அண்மையில்நடைபெற்ற 'கணிப்பொறி-2000' நூல வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு வெளியீட்டு உரையை நிகழ்த்திய யாழ் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. வரதராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் வைபவத்தில் வெளியீட்டுரையை நிகழ்த்திய பிரதிப் பணிப்பாளர் வரதராசா தொடர்ந்தும் தமதுரையில் தெரிவிக்கதாவது:-

இந்நூல் தமிழ் தெரிந்த எவருக்கும் பயன் தரும் நூல் கணனி மொழிக்கு செந்த மொழி எதுவுமில்லை கணனி எங்கு உருவாக்கப்பட்டதோ அங்குள்ள மொழியே பயன் படுத்தப்படுகிறது. இது மின்னணு முறையில் இயங்குகிறது. இது எமக்கு பலவிதமான வசதிகளை உருவாக்கித் தருகிறது. யாழ். குடாநாட்டில் கணனி 1992 இல் அறிமுகப் படுத்தப்பட்டாலும் 1996 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தான் தனிப்பட்ட பாவனைக்கு வந்தது.

எம் மக்கள் இடையே வாசிப்பு ஆர்வம் இல்லாததால் நல்ல பல நூல்களை வெளியிட எழுத்தாளர்கள் பின்னடிக்கிறார்கள். இதனால் யாழ்ப்பாணத்தில் பல அச்சு இயந்திர சாலைகள் மூடிய நிலையிலேயே உள்ளன புத்தகங்களை வெளியிடும் நிலை உருவானால் இந்த அச்சகங்கள் திறக்கப்படும் நிலை ஏற்படலாம் — என்றார்.

யாழ். கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ. இராஜகோபால் தமது தலைமை உரையில் கூறியதாவது:

எதிர்வரும் 2002 ஆம் ஆண்டில் இருந்து ஆண்டு 6 தொடக்கம் கணிப்பொறிக் கல்வி ஆரம்பமாகிறது ஒரு பொருளின் பயனைப்பெற அப்பொருளைப்பற்றி முழுவதும் அறிய வேண்டும். அப்போதுதான் முழுப் பயனையும் அடைய முடியும். உலகம் மிக வேகமாக மாறி வருகிறது. நவீன தொழில்நுட்ப செயற்பாடுகளினால் உலகம் மிகவும் சுருங்கி விட்டது. இணையத்தளம் மூலம் உடனடியாக உலகத் தகவல்களைப் பெறக்கூடிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

கல்விவேறு வாழ்க்கைவேறு என்ற நிலை மாறவேண்டும். கல்வி எதிர்வரும் காலங்களில் கணனிக் கல்வியாக மாறவுள்ளது இந்த மாற்றத்தை நாம் உணர வேண்டும். கணனியை நாம் கற்காவிட்டால் உலகத்துடன் நாம் ஒன்றாக இணையமுடியாது. கணனிப் பொறி வளர்ச்சியில் மென்பொருள்களை உற்பத்தி செய்வதில் தமிழ் நாடு உலகில் முன்னணியில் உள்ளது தமிழர்கள் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர் — என்றார்

பதிலுரை நிகழ்த்திய நூலாசிரியர் கலையார்வன் கு. இராயப்பு தமது உரையில் தெரிவித்ததாவது:-

செயல்முறைக்கணிப்பொறி நூலை சென்ற வருடம் நான்வெளியிட்டதன் பின்னர் அதைக்கற்றவர்களின் கோரிக்கைக்கு இணங்கவே 'கணிப்பொறி 2000' எனும் இந்த நூலை எழுத வேண்டும் எனும் அவா என்னுள் எழுந்தது. நான் கற்றுக்கொண்டதை ஒவ்வொருவரும் கற்க வேண்டும் என்பதற்காகவே எனது நேரத்தைத் தியாகம் செய்து இந்நூலை உருவாக்கினேன் — என்றார்.

கணிப்புரையை கலாநிதி எவ். எக்ஸ். ஜெயசேகரம் அடிகளாரும், பாராட்டுரைகளை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஜெ பி ஈ செல்வராஜா அடிகள். ஸ்ரீலங்கா ரெலிகொம் லிமிடெட் பிரதேசமுகாமையாளர் எஸ். அன்ரனிதாசன், கணனிப் பூங்கா இயக்குநர்கு. நந்தகுமார் ஆகியோரும் நிகழ்த்தினார்கள். (க-51)

# நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 21

வானொலி அறிவிப்பாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் யாழ். அலுவலகத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து வானொலி அறிவிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சையே இன்று நடைபெறவுள்ளது

ஏனைய பிரதேச செயலர் பிரவுகளிலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் பின்னர் நடத்தப்படும் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

# யாழ். சிறைச்சாலை கட்டட நிர்மாணத்திற்கு

# உலகவங்கி 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு

## பணிகளை ஆரம்பிக்கத் திணைக்களம் பின்னடிப்பு?

யாழ்ப்பாணம், மே 21

போதிய இடவசதிகள் இன்றி இயங்கும் யாழ். சிறைச்சாலைக்கு புதிய கட்டடத்தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கு உலக வங்கி 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்தக் கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் கட்டம் கட்டமாக உலக வங்கி ஒதுக்கியுள்ள நிதி வழங்கப்படவுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். சிறைச்சாலை அமைப்பது தொடர்பாகவும், நீதிமன்ற கட்டடத் தொகுதியை அமைப்பது தொடர்பாகவும் ஆராய்வதற்காக அண்மையில் உலகவங்கி அங்கத்தவர்கள் அடங்கிய குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தது.

யாழ். சிறைச்சாலை அமைத்திருந்த பிரதேசம் மற்றும் தற்போது யாழ். சிறைச்சாலை இயங்கும் கட்டடம் ஆகியவற்றை இந்தக் குழுவினர் பார்வையிட்ட பின்னர் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தனர்.

இதேவேளை -

யாழ். சிறைச்சாலைக்குப் புதிய கட்டடத்தை அமைக்க உலக வங்கி நிதி ஒதுக்கி நிர்மாணப்பணிகளை ஆரம்பிக்குமாறு அறிவித்திருந்த போதும் —

சிறைச்சாலை திணைக்களம் உரிய நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரியவில்லை என்றும் — யாழ். சிறைச்சாலை புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்றும் — யாழ். சிறைச்சாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

(க-6-4)

### மனித கௌரவத்துக்கான மன்றம்

## 2 ஆயிரம் வழக்குகளுக்கு இலவசமாக சட்ட உதவிகள்

யாழ்ப்பாணம், மே 21

காணாமற்போனோர், கைது செய்யப்பட்டோர் உட்பட 2 ஆயிரம் பேருக்கும் அதிகமானோரின் வழக்குகளை மனித கௌரவத்துக்கான மன்றம் நடத்தியுள்ளதாக மன்றத்தின் சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார்.

களுத்துறை, அநுராதபுரம், நீர்கொழும்பு, கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் போன்ற நீதிமன்றங்களில் இது தொடர்பான வழக்குகளில் தமது சட்டத்தரணிகள் இலவசமாக ஆஜராகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் இவ்வழக்குகளில் ஆஜராவதற்காக சட்டத்தரணிகள் எஸ் விஜயசிங்கம் மற்றும் திருமதி ச. இளங்கோவன் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

வடபகுதிக்கு வெளியேயுள்ள நீதிமன்றங்களில் 100 வழக்குகளும், பிணையில் விடுவிக்கப்பட்டவர்களின் 65 வழக்குகளும் தம்மால் தற்பொழுது நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

(ச-5)

## காரைநகர் - யாழ். பஸ்சேவை காலை 6மணிக்கே ஆரம்பிக்குக!

### சாலை முகாமையாளரிடம் கோரிக்கை

காரைநகர், மே 21

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான முதல் பஸ் சேவையை காலை 6 மணிக்கு ஆரம்பிக்குமாறு ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

காரைநகர்ச் சாலைக்கு நேரடியாகச் சென்ற பிரதேச சபைத் தலைவர் காரைநகர்ப் பகுதி மக்கள் யாழ் நகருக்குச் சென்று வருவதில் உள்ள நெருக்கடிகள் தொடர்பாக சாலை முகாமையாளருடன் கலந்துரையாடினார்.

பிரதேச சபைத் தலைவரின் வேண்டுகோளை ஏற்ற காரைநகர் சாலை முகாமையாளர் கே. உருத்திரசுந்தரம் வெகு விரைவில் யாழ். நகருக்கான பஸ் சேவையை காலை 6 மணிக்கு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

இதேவேளை —

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, காரைநகர் ஆகிய பகுதிகளுக்கு தலா ஒரு புதிய பஸ் வழங்கப்பட உள்ளதாக ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா தெரிவித்தார். (ம-73)

## மாணவர்களுக்கு நோய்கள் குறித்த விவரணப் படம்

வலிகாமம் தெற்கு, மே 21

சுன்னாகம் சுகாதார பரிசோதகர் பகுதிக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அயடின் பற்றாக்குறை, போஷாக்குப் பற்றாக்குறை என்பவற்றால் ஏற்படும் நோய்கள் பற்றியும், புழுக்களினால் ஏற்படும் வியாதிகள் பற்றியும் எடுத்துக் கூறும் சுகாதார விளக்க விவரணப் படங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

சுகாதாரப் பரிசோதகர் கு. பத்மகுமாரின் ஏற்பாட்டில் மயிலணி சைவ வித்தியாலய மாணவர்களுக்கு மேற்படி சுகாதார விளக்க விவரணப் படங்கள் காண்பிக்கப்பட்டன. தொடர்ந்து ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் இந்தப் படங்கள் காண்பிக்கப்பட உள்ளன.

(க-152)

## விவசாய ஆசிரியர் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, மே 21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் விவசாய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்புகள் இன்று தொடக்கம் 25 ஆம் திகதி வரை தொடர்ந்து ஐந்து தினங்கள் — யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தில் நடைபெறவுள்ளன.

(க-117)

## மீசாலை வீரசிங்கம் மாணவருக்கு

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவர்களின் விசேட அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

விண்ணப்பம் செய்த மாணவர்கள் யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் இயங்கும் மகா வித்தியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் கு. சிவானந்தம் அறிவித்துள்ளார். (க-117)

## ஊர்காவற்றுறை வெளிநோயாளர் பிரிவு ஸ்தம்பிதம்

ஊர்காவற்றுறை, மே 21

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் வைத்தியர்கள் இன்மையால் வெளிநோயாளர் பிரிவு முற்றாகச் செயலிழந்துள்ளதுடன் வார்ட்டுக்களில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களும் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தாதிய உத்தியோகத்தர்களே தற்பொழுது வார்ட்டுக்களில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களைக் கவனித்து வருகின்றனர்.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்கின்றனர். இங்கு ஒரேயொரு டாக்டரே கடமையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-16)

## ஓராண்டு நிறைவு வைபவம்

காரைநகர் மருதமலை முருகன் சனசமூக நிலைய முதலாவது ஆண்டு விழாவும், நூலகத் திறப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நிலையத் தலைவர் எஸ். செல்வராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், ஊர்காவற்றுறைப் பிரதேச சபைச் செயலாளர் க. கணேசலிங்கம், காரைநகர் போக்குவரத்துச் சாலை முகாமையாளர் வி. உருத்திரசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (க-10)

## கைதான 70பேரின் அறிக்கையை உடன் சமர்ப்பிக்கப் பணிப்பு!

### தொல்லை தவிர்ப்புக்குழு பொலீஸாருக்கு உத்தரவு

கொழும்பு மே 21

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் என்பவற்றின் கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எழுபது சந்தேகநபர்களின் பேரின் அறிக்கைகளை உடனடியாகச் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கும்படி அவர்களைக் கைது செய்தபொலீஸ் நிலையங்களுக்குச் சட்ட விரோத கைதுகள் மற்றும் தொல்லை தவிர்ப்புக்கான ஜனாதிபதிக் குழு பணிப்புரை விடுத்துள்ளது.

நீதியமைச்சின் சமூக, சட்ட சேவைகள் குழு களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக அண்மையில் அங்கு விஜயம் செய்தது.

அப்போது அச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் எழுபது பேர் தம்மை விசாரணை செய்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி குழுவினரிடம் கோரிக்கை விடுத்தனர். இதனைக் குழுவினர் சட்ட விரோதக்கைதுகள் மற்றும் தொல்லைகள் தவிர்ப்புக்கான ஜனாதிபதிக் குழுவின் தலைவரும், நீதியமைச்சருமான பட்டி வீரக்கோனின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இதனை அடிப்படையாக வைத்து குழுவின் கீழ் இயங்கும் விசேட பொலீஸ் குழு மேற்படி எழுபது பேரையும் கைது செய்த அந்தந்த பொலீஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு, அவர்கள் தொடர்பான அறிக்கைகளை உடனடியாகச் சட்டமா அதிபருக்கும், சட்ட விரோத கைதுகள் மற்றும் தொல்லைகள் தவிர்ப்புக் குழுவுக்கும் அனுப்பி வைக்கும்படி கேட்டுள்ளது. (க-7)

## சமுர்த்தி வங்கி; ஆரம்ப ஏற்பாடு

வலி. தென்மேற்கு, மே 21

யாழ் மாவட்டத்தில் சமுர்த்தி வங்கி செயற்பாட்டை அறிமுகப்படுத்த கிராமங்கள்தோறும் சமுர்த்தி சிறுகுழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு சமுர்த்தி பிரிவிலும் 5 குடும்பங்கள் சேர்ந்து ஒரு சமுர்த்தி குழுவாகப் பிரிக்கப்பட்டு அதன் ஊடாக சமுர்த்தி சங்கம் உருவாக்கப் படவுள்ளது.

மேற்படி சமுர்த்தி சிறு குழுக்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன

(க-185)


## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தையல் நிறுவனத்திற்கு ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியரின் ஆடைகள் வெட்டுவதில் அனுபவம் வாய்ந்தவர்களும் மேற்படி ஆடைகள் தைப்பதில் அனுபவம் வாய்ந்தவர்களும் மேற்படி நிறுவனத்தை நிருவகிப்பதிலும் (Management) அனுபவம் வாய்ந்தவர் தேவை.

(திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். 31-05-2001 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்)

வீ. இல. 1286: மே.பா உதயன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(87961)


## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்

திரு வீ. இராசையா

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்கள் சிவபதம் எய்தியமையையிட்டு துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ ஈவினை அ. த. க.
பாடசாலை.

(88047)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா கார்த்திகேசு

சாவகச்சேரி வடக்கு, மடத்தடி கிழக்கு ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி கார்த்திகேசு இராசம்மா நேற்று (20—05—2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், ஆச்சிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை), கந்தையா, அருணாசலம், சபாரத்தினம் ஆகியோரின் சகோதரியும், சரஸ்வதி (ஆசிரியை மீசாலை விக்கினேஸ்வர ம. வி.), மகாதேவா (நாதன் இந்தியா), மார்க்கண்டு (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மலிங்கம், நிர்மலாதேவி (இந்தியா), சிவகலாநிதி (ஆசிரியை வவுனியா பாரதிபுரம், ம. வி) ஆகியோரின் அன்பு மாமியும், கலாநிதி (ஆசிரியை வயாவிளான் ம.ம வி.), தபோநிதி (சுவிஸ்) ஆகியோரின் பெரிய தாயாரும், ஜெயக்குமாரன் (அதிபர் ஈவினை அ.த க.பாடசாலை), நிர்மலன் (சுவிஸ்), ஆகியோரின் பெரியமாமியும், காலஞ்சென்ற குமணன்மற்றும் பகீரதன் (ஜேர்மனி), சுஜீவன், அஜந்தன் (இந்தியா), துளசிகரன், ஜுகான் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கீதாஞ்சன், கோபிதாஞ்சன் (வவுனியா), லக்ஸிகன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. தர்மலிங்கம்,
(துரை) மருமகன்

நிரந்தர முகவரி:
மடத்தடி கிழக்கு ஒழுங்கை,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு,

(88046)

உதயன்

## இதுவும் ஒருவிதப் புளுகு!

போரா நின்று, இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு கிடைத்து, நாட்டில் சமாதானம் உதயமாக வேண்டும்; உதயமாகுவது மட்டுமன்றி நிலைக்க வேண்டும்; இவை தமிழ் மக்களின் பெரு விருப்பம் மட்டுமன்றி, சிங்கள மக்களினது விருப்பமும் ஆகும்.

மதிப்பிடக்கரிய சமாதானம் உதயமாவதற்கான நம்பிக்கை எப்போது பிறக்கும்; அதற்குரிய ஆக்க பூர்வமான நல்ல சமிக்ஞைகள் எப்போது தெரியும்; என்று ஆகக் குறைந்தது கடந்த 6 மாதங்களுக்கு மேலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு பெரிய சமிக்ஞைகள் எதுவும் தெரியவில்லை. அவ்வப்போது, சின்னஞ்சிறு சமிக்ஞைகள் மட்டுமே தெரிந்தன. அவையும் பலன் தருவனவாக, தாக்கமுள்ளவையாக அமையுமோ என்பது சந்தேகமாகி வருகிறது.

காரணம் -

நோர்வே நாட்டின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புக்களுடனும் ஆர்வம் குன்றாமல் பேசிய போதிலும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதில் தொடர்ந்தும் இழுபறி நிலையே காணப்படுகின்றது.

அதாவது, சமாதானப் பேச்சுகான இரு தரப்பு இணக்க நிலையை எய்துவதில் இக்கட்டான - மிகக்கஷ்டமான - சூழ்நிலை இப்போது தோன்றி உள்ளது. இந்த இக்கட்டை அவிழ்ப்பது விரைவில் ஆகக் கூடிய ஒன்றாகத் தெரியவில்லை!

இந்த இக்கட்டுக்குப் பிரதான காரணம் தம்மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கினால் மட்டுமே சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்ற முடியும்; அதன் பொருட்டு தடையை நீக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் முன்வைத்த வேண்டுகோளை அரசாங்கம் ஏற்க மறுப்பதேயாகும்.

விடுதலைப் புலிகளுடன் பேசாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு போரைநிறுத்த முடியாது என்ற நிலையிலேயே - அவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதனை ஏற்றுக்கொண்டே - அரசு சமாதானப் பேச்சுக்கு விருப்பம் கொண்டது. அத்தகைய விருப்பத்தின் பேரிலேயே தமக்கும் புலிகளுக்குமிடையில் அனுசரணையாளராகச் செயற்படுமாறு நோர்வே அரசாங்கத்தை உத்தியோகபூர்வமாக இலங்கை அரசு கேட்டுக்கொண்டது.

இதற்குப் பின்னர், விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்ட இயக்கம், சட்டபூர்வமற்ற அமைப்பு என்ற நிலையில் இருந்தே பேசவேண்டும் என்று கூறுவது என்ன நியாயம்? ஒருதரப்பைச் சட்டபூர்வமற்ற அமைப்பாக வைத்துக்கொண்டு நடத்தும் பேச்சுவார்த்தையை, அந்தப் பேச்சுவார்த்தையில் எடுக்கப்படும் முடிவுகளை எவ்வாறு அங்கீகரிக்கப்பட்டவையாகக் கொள்ளமுடியும்? அத்தகைய பேச்சினால் ஆக்கபூர்வமான பெறுபேறுகள் எவ்வாறு தேறும்?

மேலும், பேச்சுவார்த்தை மேசையில் அடுத்த தரப்பைப் போலவே தாமும் சமநிலையில் நின்று பேச வேண்டும் என்றே இரண்டாவது தரப்பு விரும்பும்? முதலாவது தரப்பு தலையை உயர்த்திக்கொண்டு 'உறுக்காட்டியத்துடன்' பேசவும், தாம் தலையைக் குனிந்தவாறு தாழ்ந்த குரலில் பேசவும் இரண்டாவது தரப்பு எப்படி இணங்கும்? விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, எந்தத் தரப்புமே அதனை அறிவ விரும்ப மாட்டாது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்குப் பின்னடிக்கும் ஜனாதிபதி சந்திரிகா -

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வந்துள்ள சீனப் பிரதமரிடம் தெரிவித்த தகவல் மிகவும் சிறப்புக்கு இடமானது!

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை எதிர்பார்த்த பலன் கிட்டாமல் சோகத்துடன் திரும்ப வைத்துவிட்டு -

இங்கு சமாதானம் உதயமாகும் நம்பிக்கை அதிகரித்து இருப்பதாக, உண்மைநிலைக்கு நேர்மாறாகச் சீனப் பிரதமரிடம் புளுகி இருக்கிறார் இலங்கை ஜனாதிபதி!

அவர் சொல்வது நிதர்சனமாக வேண்டுமெனில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கிப் பேச்சைத் தொடங்கவேண்டும். செய்வாரா?

மதிப்பீட்டுத் திணைக்களப் போக்கினால்

# உயர் தொழில் நிறுவனத்திற்கு காணிக் கொள்வனவில் மந்தநிலை

யாழ்ப்பாணம்,மே21

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அசமந்த போக்கினால் யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு உரிய நேரத்தில் காணி கொள்வனவு செய்ய முடியாத நிலையேற்பட்டுள்ளதாக நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிறுவனத்துக்கென இருபாலைப் பகுதியில் காணி ஒன்று பார்வையிடப்பட்டு அதனைக் கொள்வனவு செய்வதற்கு 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

இக்காணி தொடர்பான மதிப்பீட்டு வேலைகள் மதிப்பீட்டுத் திணைக்களததிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்குரிய மதிப்பீட்டு வேலைகள் செய்வதில் மேற்படி திணைக்களம் காட்டிய அசமந்தப் போக்கினால் இவ்வருடத்திலும் காணியைக் கொள்வனவு செய்ய முடியவில்லை என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.தொழில் நுட்ப நிறுவனம் பலாலி வீதி, திருநெல்வேலியிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் கடந்த சில வருடங்களாக இயங்கி வருகிறது. (க-5)

## நாட்டு நடப்பு

வெய்யோன் ஒளி படர்ந்தந்த
வேலவன் தேர் மின்ன
கைய்யோ தலை வைத்தடியார்
கதறி மன முருக
மெய்யோ சிலிர்த்தடியார் பலர்
மேனி புரண்டு உருள
'ஐய்யோ' என அடியாள் அழ
அறுத்த தாலியுடன் மறைந்தான்

- மு.திருநாவுக்கரசு.

# சமாதான முயற்சி குறித்த ஆஸி. அரசின் நிலைப்பாடு விரைவில் வெளியிடப்படும்

## அங்கு சென்ற எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் தகவல்

யாழ்ப்பாணம், மே21

இலங்கையில் புரைச்யோடிப் போயுள்ள இனப்பிரச்சினையை பேச்சு மூலம் தீர்த்து வைப்பதற்கான நோர்வேயின் முயற்சிக்கு ஆஸ்திரேலிய அரசு இதுவரை ஆதரவு தெரிவிக்காதது தமிழ் மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி இருக்கிறது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆஸ்திரேலியாவில் தெரிவித்திருக்கிறார்.

ஆஸ்திரேலிய தமிழ் அகதிகள் கழகத்தின் அழைப்பின் பேரில் மெல்போன், சிட்னி ஆகிய நகரங்களில் நடைபெற்ற அவர்களது 12ஆவது ஆண்டு நிறைவு மாநாடுகளில் கலந்து கொள்வதற்காக சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் தனது இரண்டு வார கால விஜயத்தை முடித்துக்கொண்டு சென்ற வியாழக்கிழமை நாடு திரும்பியுள்ளார்.

அவரது ஆஸ்திரேலிய விஜயத்தின் போது சிட்னி, மெல்போன், கன்பரா, பிறிஸ்பன் ஆகிய நகரங்களுக்கு விஜயம் செய்த யோசப் பரராஜசிங்கம், அங்கு பல கூட்டங்களில் உரையாற்றியதுடன் அந்நாட்டில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், செனேட்டர்கள், வருங்கால அமைச்சர்கள், மனித உரிமைக் குழுக்கள், கத்தோலிக்க, அங்கிலிக்கன் ஆயர்களையும் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினையின் தற்போதைய நிலை குறித்தும், நோர்வே நாட்டின் சமாதான முயற்சிகளுக்கு ஆஸ்திரேலியா அரசு முழுமையான ஆதரவு அளிக்கத் தவறியது சம்பந்தமாகவும் எடுத்துக் கூறினார்.



இந்தியா, தெற்காசியா நாடுகளுக்கான வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் திரு.கிறேம் லேட், பிரதமர், அமைச்சரவை ஆகியவற்றின் பிரதிச் செயலாளர் திரு.றைஸ் வெல்ஸ் ஆகியோரை தலைநகர் கன்பேராவில் சந்தித்து இது சம்பந்தமாக எடுத்துக் கூறியபோது இதுவரை ஆஸ்திரேலியா அரசு இது சம்பந்தமாக எதுவித திட்டவட்டமான அறிக்கையையும் வெளியிடவில்லை என்று ஏற்றுக் கொண்ட இருவரும் விரைவில் வெளிவிவகார அமைச்சர் மூலம் திட்டவட்டமான ஆதரவு அறிக்கை ஒன்றை வெளியிட நடவடிக்கை எடுப்பதாகத் தம்மிடம் வாக்குறுதி அளித்துள்ளனர் என்று யோசப் எம்.பி. தெரிவித்தார்.

17 ஆண்டுகளுக்கு முன்பு எதிர்கட்சித் தலைவராக இருந்த காலஞ்சென்ற திரு.அமிர்தலிங்கம் அவர்களுக்கு பின்பு முதன் முறையாக ஆஸ்திரேலியா நாட்டிற்கு விஜயம் செய்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த வெளிவிவகார அமைச்சராக நியமனம் பெறவுள்ள லோரி பெரட்டன், குடிவரவு அமைச்சராக நியமனம் பெறவுள்ள கொன்சியாக்கே, வனபரிபாலன, பாதுகாப்பு, விஞ்ஞானம் போன்றவற்றிற்கான அமைச்சராக நியமனம் பெறவுள்ள லொனி டோர்குசன், செனட் சபைத் தலைவர் மார்கிரட் றெய்ட், முன்னாள் ஆஸ்திரேலிய சட்ட மா அதிபரும், தற்போதைய சர்வதேச நீதித்துறை அமைப்பின் தலைவருமான நீதியரசர் டேரான் டொபட், மற்றும் மனித உரிமைக் குழுக்கள், வெளிநாட்டு நிதி உதவி பணிப்பகத் தலைவர் போன்றோரையும் சந்தித்து இலங்கையில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்கள், வன்னிப் பகுதிக்கான உணவு, மருந்துத் தடை, அகதிகள் நிலைவரம், கற்பழிப்பு, பொதுமக்கள் மீதான குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்கள், பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகாலச் சட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள், சித்திரவதைகள் சம்பந்தமாக பல புள்ளி விவரங்களுடன் எடுத்துக் கூறியதுடன் இது சம்பந்தமான அறிக்கைளையும் யோசப் எம்.பி. சமர்ப்பித்தார்.

விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஒரு தமிழ்க் கட்சியைத் தவிர ஏனைய தமிழ்க் கட்சிகள் யாவும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றும் -

இனப்பிரச்சினைக்கான எந்த ஒரு தீர்வும் அவர்களது முழுமையான பங்களிப்பின்றி செய்ய முடியாதென்பதையும் அவர்களுடன் பேசுவதன் மூலமே பிரச்சினையைத் தீர்ப்பதுடன் இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்ட முடியும் என்கின்ற யதார்த்த நிலையையும் அவர் இவர்களிடம் வலியுறுத்தியதுடன் அவர்கள் பங்குபெறாத தீர்வு எதுவும் மண்ணிலே வேர் பிடிக்க முடியாத மரமாக சாய்ந்து விழுந்து விடும் என்றும் கூறிய அவர் இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக ஆஸ்திரேலியா அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (ஐ)

# 5 அமைச்சர்களைப் பின்தொடர்ந்து கண்காணித்துவரும் சீ.ஐ.டிக் குழு

கொழும்பு,மே21

ஐந்து அமைச்சர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கும் அவர்களை பின் தொடர்ந்தும் அவர்களின் செயற்பாடுகளை அவதானிப்பதற்கும் அவர்களது தொலைபேசி உரையாடல்கள் கூட பதிவு செய்வதற்கும் அனுமதி அளிக்கப்பட்ட சிஐடி குழு ஒன்று இயங்கி வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்துக்கு எதிராக ஐதேக கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படும் அமைச்சர்களின் நடவடிக்கைகளே இவ்வாறு அவதானிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் எதிர்காலத்தில் அரசாங்கம் முகம் கொடுக்கவுள்ள அரசியல் மற்றும் வேறு சிக்கல்கள் தொடர்பாக முன் எச்சரிக்கையுடன் இருப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அமைச்சரவை தீர்மானப்படி சிக்கல்கள் தொடர்பாக விசேட இரகசிய பாதுகாப்புப் பிரிவு ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஐதேகவின் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஜூன் மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதனால் அதற்கு வெற்றிகரமாக முகம்கொடுக்கத் தேவையான திட்டங்களைத் தீட்டும் பொறுப்பு பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவிடமும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவிடமும் உத்தியோகபூர்வமற்ற வகையில் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ்க் கட்சிகளுடன் அனுசரணையாக நடந்து கொள்ளும் பொறுப்பும் சில அமைச்சர்களிடம் விடப்பட்டதுடன் ஊர்வலங்களுக்கான தடையை நீடிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (க)

## கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத் திறப்பு விழா

சண்டிலிப்பாய்,மே21

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஜி.ரி.இசட்) உதவித் திட்டத்தின கீழ் புதிதாக நிறுவப்பட்ட பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டட திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுளளது.

சங்கத் தலைவர் கி.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக ஜி.ரி.இசட் நிறுவனத்தின் புனரமைப்புத் திட்டத் தலைவர் ஈவகாட் கல்பா கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகச் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மு.பாலசிங்கம், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஸ்ரீபதி, ஜி.ரி.இசட் நிறுவன பிரதம இணைப்பாளர் எஸ்.இராசசிங்கம், பிரதம ஆற்றுப்படுத்தர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன், பொறியியலாளர் ஏ.ஸ்ரீகாந்தா ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க-135)

## நாளை

வைகாசி 8
செவ்வாய்க்கிழமை
திதி: சதுர்த்தசி
முற்பகல் 9.53 வரை
நட்சத்திரம்: பரணி
நண்பகல் 12.19 வரை
அமாவாசை விரதம்
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 10.22 - 11.52
ராகுகாலம் : 2.52 - 4.22
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

மற்றவர்களுடைய துன்பங்களை உணர முடியாதவன் மனித உருவத்தில் உள்ள விலங்காவான்.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



'மிதிவெடி கவனம்' என்ற எச்சரிக்கை அறிவித்தலையும் தாண்டிக் களவுக்குப் போனால் கால் போகும் கவனம்!

உ

## சாவகச்சேரி பெரியமாவடி கந்தசுவாமி கோயில்

இன்று (21.05.2001) திங்கட்கிழமை தேர்த்திருவிழா நாளாகும். முன்னைய விழாக்களின் அருள் சிறப்பினை நினைந்து அருள் பெற வேண்டுவோம்.

"பண்டிதர்"
சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்
(பிரதம குரு)

சாவகச்சேரி. (88011)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



படைப்பு 1976 - 08 - 23

அழிப்பு 2000 - 05 - 03

### செல்வி சுஜாதா இராஜகாந்தம்

திதி : 2001-05-21

ஆண்டொன்று ஆனதடி அன்பு மகள் சுஜாதாவே!
அழகினிலே விளைந்த எங்கள் செல்வியே!
இன்பமதை எய்தி எம் துயர் துடைக்க வந்தவளே!
எண்ணியிதை நிறுத்தி எமை ஏங்க வைத்த காரிகையே!
மண்மிதித்தெம் நாட்டில் நீ வருவாய்
கண்விழித்துக் காத்திருப்போம் கண்மணியே நீ வருவாய்!

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்,
டென்மார்க் அத்தை,
மாமா குடும்பத்தினர்

*வறாத்துப்பளை*
*பருத்தித்துறை*
(87968)

## நெஞ்சை விட்டகலாத ஐந்தாவது ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 31 - 05 - 1941

மறைவு 15 - 05 - 1996

திருமதி

### விமலாசனி தெய்வேந்திரம்

(முன்னாள் அதிபர், யா/இடைக்காடு மகாவித்தியாலயம்)

திதி:- அபரபக்கத் திரயோதசி 21.05.2001

உயர்வெனும் பண்பில் தோன்றி
ஒளி விளக்காய் வாழ்ந்து
எமையெல்லாம் வாழ வைத்து
இறையடி சேர்ந்த அம்மாவே!
ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறாது உன் நினைவு எம் உள்ளத்தில்
என்றென்றும் வாழியவே!

ஓம் சாந்தி! சாந்தி!! பத்திரகாளி துணை

கணவர், மகள், மகன்.

*465/A,K.K.S. வீதி.*
*யாழ்ப்பாணம்.*

நிரந்தர வதிவிடம்:-
*வேம்படி வளவு,*
*தொண்டமனாறு.*

(87768)

## கண்ணீர் அஞ்சலி

*வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்*
திரு. வீ.இராசையா அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
*குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை,*
*வயாவிளான்.*

(88029)

## கொழும்புத்துறையில் கலந்துரையாடல்

அரியாலை,மே21

கொழும்புத்துறை பிரதேச மக்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த கலந்துரையாடலில் வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் கலந்து கொள்வார்.

இந்த கலந்துரையாடலில் இடம்பெயர்ந்த கொழும்புத்துறை பிரதேசத்தின் சகல மக்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு இந்து இளைஞர் மன்றம் கேட்டுள்ளது. (உ-17)

## பளைப் பகுதியில் மிதிவெடியில் சிக்கிய பெண்

வவுனியா,மே21

பளை-மாசார் பகுதியில் தேங்காய் எடுக்கச் சென்ற குடும்பப் பெண் ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது கால் ஒன்றை இழந்துள்ளார். இவர் தற்போது மல்லாவி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

உடுத்துறையில் இருந்து இடம்பெயர்ந்து கண்டிக்குளத்தில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான கணேசலிங்கம் ராதா என்ற பெண்ணே கடந்த புதன்கிழமை மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்தவர் ஆவார். (க-6)

## சிப்பாயின் சூட்டுக்கு இரையானார் படை அதிகாரி!

தென்மராட்சி,மே21

தவறைக் கண்டித்த படை அதிகாரியை, சிப்பாய் சுட்டுக் கொன்ற சம்பவம் கடந்த சில தினங்களுக்கு முன் கச்சாய் படை முகாமில் இடம்பெற்றுள்ளது.

லெப்டினன்ட் விக்கிரமசிங்க என்னும் அதிகாரியே கொல்லப்பட்டவர் ஆவார். இவரது மரணம் தொடர்பாக விசாரணை நடத்திய சாவகச்சேரி நீதிவான், சடலத்தை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியினை பிரேத பரிசோதனை செய்யுமாறும், கொழும்பு நகர திடீர் மரண விசாரணை அதிகாரியினை மரண விசாரணையையும் நடத்தி அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக விஜித தஸநாயக்கா என்னும் சிப்பாயை கொடிகாமம் பொலீஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபரை இம்மாதம் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-117)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை - கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை
*வைத்திய கலாநிதி*
**சி.இராசரத்தினம்,**
*121. 2ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*
தொலைபேசி எண்: 2459

(87507)

மாணவர்களே! வெளிவந்துவிட்டது!
மாத பொதுஅறிவுச் சஞ்சிகை
மின்னல்
இதழ் 1.
விலை ரூபா 20/=
*ஆசிரியர்:*
சின்னத்தம்பி பத்மராஜன்
★ சகல புத்தகசாலைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
★ மாணவர்களுக்கான போட்டி
*முடிவு திகதி:-* 30.05.2001
பிரதிக்கு முந்துங்கள்.

(88017)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 12 - 07 - 1914

உதிர்வு 21 - 04 - 2001

அமரர்

### சி.கணபதிப்பிள்ளை

(வர்த்தகர், மருதங்கேணி, வடமராட்சி கிழக்கு)

அன்புக்கினிய தந்தையே! எமதருமைத் தெய்வமே!
எம்மை விட்டுப்பிரிந்த முப்பத்தோராம் நாளினிலே
உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டுமென்று
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

எங்கள் அன்புக்குரியவர் இவ்வுலகை விட்டு மீளாத்துயில் கொண்ட துயரச் செய்தி அறிந்து எமதில்லம் வந்து பலவழிகளிலும் உதவிய அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும் துயரச் செய்திகள் அனுப்பியோருக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தினர், மருமக்கள் ஆகியோருக்கும், செய்தியினை உடன் பரிமாறிக் கொள்ள உதவிய அம்பன் நகுலேஸ்வரி தொலைத்தொடர்பினருக்கும் இன்றுவரை உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்வதோடு -

இன்று (21-05-2001) திங்கட்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தற்காலிக முகவரி:-
*புலோலி தெற்கு.*
*புலோலி.*

நிரந்தர முகவரி:-
*மருதங்கேணி தெற்கு,*
*ஆஸ்பத்திரி வீதி,*
*தாளையடி.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(87929)

## நீங்காத நினைவினில் நான்காம் ஆண்டு



தாயவள் மகிழ்ந்திட
அரவணைப்பில்
22 - 12 - 1975

தாயவள் கதறிட
அநியாய அழிப்பில்
21 - 05 - 1997

### செல்வி சைமினி தர்மலிங்கம்

"செல்லத் திருமகளே எம் சிந்தையில் நிறைந்தவளே!
வேண்டுதல் செய்து பிறந்தவளே!
வேண்டாத உலகம் போனதுதான் தாங்கவில்லை
பூண்டுகள் முளைத்து சிரிக்கும் - இப் பூமியில்
நல்ல பயிர் வளர்க்கத்தான் ஒரு நாதியில்லை.
ஆண்டுகள் நான்கு போன பின்னும் - உனை
அரவணைத்த நினைவுகள் எம்மில் ஆறவில்லை!

பாவிகள் விரித்த வலைகளிலே
அப்பாவி... நீதான் மாண்டு விட்டாய்!
ஏவிய பேய்கள் சிரித்து நிற்க - நீ
ஆவிகள் உலகம் சென்று விட்டாய்!
உன் தாவிடும் நினைவுகள் மீட்டு நிற்க
கால் தடங்கள் எங்கும் பதித்துச் சென்றாய்!
பூமியில் வீழும் எங்கள் கண்ணீரை
பூக்கரம் நீட்டித் துடைப்பாயோ?
சாமிகள் பலரை வேண்டுகின்றோம் - எம்
சந்ததியில் மீண்டும் நீ பிறப்பதற்கு!"

*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*

*இமையாணன் கிழக்கு,*
*உடுப்பிட்டி.*

- குடும்பத்தினர்.

*"நல்லவர்கள் நீண்ட காலம் வாழ்வதில்லை;*
*மாண்டவர்கள் சிலரை மறப்பதற்கு முடிவதில்லை"*

(87980)

# தென்மராட்சியில் 16 கி.அ.பிரிவுகளில் மக்களை மீளக் குடியமர்த்த ஏற்பாடு

## சிவில்நிர்வாகக் காரியாலயங்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மே21

தென்மராட்சிப் பகுதியில் 16 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

மீளக்குடியமர விரும்பும் கீழ்வரும் கிராம அலுவலர் பிரிவு மக்களை நாளை 22ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரை குறிப்பிட்ட நிலையங்களுக்கு சமுகமளிக்குமாறு படைத்தரப்பினர் கேட்டுள்ளனர்.

கைதடி தெற்கு (291), நாவற்குழி மேற்கு (294), நாவற்குழி கிழக்கு (295), மட்டுவில் நுணாவில் (311), கைதடி நாவற்குழி (297), கைதடி நுணாவில் (309), தென் மட்டுவில் (310) மேற்குறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கைதடி - கோப்பாய் வீதியில் அமைந்துள்ள கைதடி கமநல சேவை நிலையத்தில் இயங்கும் சிவில் நிர்வாகக் காரியாலயத்துக்கும் -

சங்கத்தானை (302), கச்சாய் வடக்கு (303), மட்டுவில் கிழக்கு (304), மீசாலை மேற்கு (319), மந்துவில கிழக்கு (345), மந்துவில் மேற்கு (346) இவர்கள் மீசாலை சிவில்நிர்வாகக் காரியாலயத்துக்கும் -

அல்லாரை (322), கச்சாய் (324) இவர்கள் அல்லாரை சிவில் நிர்வாகக் காரியாலயத்துக்கும் -

சரசாலை வடக்கு (317) பகுதியைச் சேர்ந்தவர்கள் யாக்கரு சந்திக்கு அருகிலும் சமுகமளிக்குமாறு படைத்தரப்பினரால் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்டுள்ள கிராம அலுவலர் பிரிவுகளுக்கு பொதுமக்கள் சென்று வருவதற்கு வசதியாகக் கொடிகாமம் சிவில் இணைப்புக் காரியாலயம், யாக்கருச் சந்தி, மீசாலை சிவில்நிர்வாகக் காரியாலயம் போன்ற இடங்களில் இருந்து குறிப்பிட்ட திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் விசேட போக்குவரத்துச் சேவையும் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-5)

### இரவு விழாக்களுக்கு முன் அனுமதி பெறவேண்டும்

வடமராட்சிப் பிரதேசத்தில் ஆலயங்களின் உற்சவங்கள் ஆரம்பித்துள்ளதால் ஊரடங்கு அமுலில் உள்ள நேரத்தில் திருவிழாக்கள் செய்வதற்கு படையினரிடம் முன் அனுமதி பெறப்படல் வேண்டும் எனவும், அனுமதி பெறுவதற்கான விண்ணப்பத்தை ஒரு வாரத்துக்கு முன்னர் அந்தந்த சிவில் அலுவல்கள் அலுவலகங்களில் ஒப்படைக்கவேண்டுமெனவும் - சிவில் அலுவலகம் அறிவித்துள்ளது. (ஒ-117)

### 8 குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

கடந்த டிசெம்பர் மாதம் படையினரால் மிருசுவிலில் படுகொலை செய்து புதைக்கப்பட்ட எட்டுப்பேரின் குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவாகத் தலா 50 ஆயிரம் ரூபாவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் வழங்கினார்.

யாழ்மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் குறைநிவிர்த்தி சேவையில் வைத்தே இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. ஏற்கனவே முதலாம் கட்ட கொடுப்பனவாக தலா 50 ஆயிரம் ரூபா இந்த எட்டுக் குடும்பங்களுக்கும் அவர்களது இருப்பிடங்களில் வைத்து வழங்கப்பட்டிருந்தது.

இக் குடும்பங்களுக்கான இறுதிக் கட்டக் கொடுப்பனவுகள் அமைச்சரவையின் அங்கீகாரம்பெற்ற பின்னர் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கு தமிழ்விவகார அமைச்சினால் விரைவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.(ம-5)

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்

# வட இலங்கை சங்கீத சபையின் தலைவர் பதவி குறித்து பிரஸ்தாபம்

## மேலதிகப் பணிப்பாளரிடம் வழங்கக் கோரிக்கை

வட இலங்கை சங்கீத சபையின் தலைவர் பதவி மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் வழங்கப்பட வேண்டும் என்று வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பாக வலியுறுத்திய பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் வலயக்கல்விப் பணிப்பாளர் ஒருவர் இப்பதவியை வகிப்பதனால் அவரது வலயத்துக்குட்பட்ட மாணவர்கள் மட்டுமே இந்தப் பரீட்சைகளில் கூடுதலாகப் பங்குபற்றுகின்றனர். இதனால் ஏனைய வலயத்திலுள்ள மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பாக பல பாடசாலைகள் எம்மிடம் சுட்டிக் காட்டியுள்ளன. எனவே 5 கல்வி வலயங்களுக்கும் பொறுப்பாக இருக்கும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் இப்பதவியை ஒப்படைத்து சங்கீத சபை பரீட்சைகளில் பரவலான மாணவர்கள் கலந்து கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சங்கீத சபை பரீட்சைகளுக்கு பரீட்சைக் கட்டணமாக ஒவ்வொரு வருடமும் 15 லட்சம் ரூபா சேர்க்கப்படுவதாகவும் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. (க-5)

# உப்புக் கூட்டுத்தாபன ஊழியரின் இக்கட்டு நிலைமை


உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு நிறுவன ரீதியான அமைப்புகள் எதுவும் இல்லாத காரணத்தினால் இங்கு கடமையாற்றிய ஊழியர்களுக்குரிய நஷ்டஈடு மற்றும் ஊழியர் சேமலாபநிதியைப் பெற்றுக் கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவு உப்பளத்தில் கடமையாற்றிய 400 ஊழியர்களுக்கு அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் ஒரு வருட சம்பளம் வழங்கப்பட்டது.

லங்கா சோல்ற் கொம்பனி லிமிட்டட்டின்கீழ் உப்பள ஊழியர்கள் கடமையாற்றி வந்தனர். இந்தக் கொம்பனி செயலிழந்துள்ளதினால் ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (க-5)

ஹாட்லியின் சிற்பி

# க.பூரணம்பிள்ளை அவர்களின் 30ஆம் நாள் நினைவிதழ்.



### கல்வித் தாய்க்குக் கடன் செலுத்திய கர்மவீரர்

இருபதாம் நூற்றாண்டின் நடுவே ஹாட்லிக் கல்லூரியின் நவீன காலச் சிற்பியாக திரு.சி.பி.தாமோதரம் அவர்களைத் தொடர்ந்து திரு.க.பூரணம்பிள்ளை திகழ்ந்தார். அவரது குணநலன்கள், நிர்வாகத் திறமைகள் என்றும் நினைவு கூரத்தக்கவை. அவரது செயற்பாடுகள் யாவும் வியந்து பாராட்டத்தக்கவை. 91 ஆண்டுகள் வாழ்ந்து ஈற்றிலும் பற்றுமிகு பாசத்தால் கல்லூரிக்கு நூல்கள் வழங்கியும், நிதியுதவி புரிந்தும் தனது கல்வித் தாய்க்கு கடன் செலுத்தியவர். நாம் அவரை அதிபராய் மட்டும் பார்க்காமல் மாணவனாகவும் பார்த்தால் அவரது பற்றுள்ளம் மற்றெவரையும் விஞ்சிநிற்கும்.

### திரு.க.பூரணம்பிள்ளை = ஒழுங்கு, கட்டுப்பாடு.

சீருடை தொடக்கம் சகல செயற்பாடுகளிலும் மாணவர்களை ஒழுங்காகவும், கட்டுப்பாடாகவும் வைத்திருக்க வழிவகைகள் ஒழுங்கமைத்து வைக்கப்பட்டிருந்தன. சகலரும் சமன் என்ற கோட்பாட்டுக்கமைய விலையுயர்ந்த உடைகளோ வேறு அணிகலன்களோ கல்லூரி வளவினுள் அனுமதிக்கப்படவில்லை. நீலக் காற்சட்டையும் வெள்ளைச் சேர்ட்டும்தான். நேரந் தவறாமை ஹாட்லியின் தாரக மந்திரம். ஒரு நிகழ்வுக்கு குறித்த நேரத்தை விட வெகு முன்னர் செல்வதையோ, தாழ்த்திப் போவதையோ அனுமதிக்காத கடுமை அவரிடம் காணப்பட்டது. அது கல்லூரிச் சமூகத்தில் ஆழப் பதிக்கப்பட்டிருந்தது. அதனை இன்றும் ஹாட்லியில் காணமுடியும்.

### திரு.கே.பி. நேர்மை, நியாயம்

அவரது காலத்தில் கல்லூரிச் செயற்பாட்டில் பாகுபாடு, பாரபட்சம், சலுகைகள் காட்டப்பட்டதாக சுவர்களில் எழுத்தோ, மறைவான கடிதங்களோ, வேறெதுவோ நடந்ததாகத் தெரியவரவில்லை. ஒவ்வொரு நடவடிக்கையிலும் மிக நிதானமாகவும், அவதானமாகவும் நேரடிக் கண்காணிப்பிலும் செயற்பட்டவர் அவர். மற்றவரைக் குறை சொன்னதும் கிடையாது; குறை கேட்டதும் கிடையாது.

### அழகு, கம்பீரம்

'நிமிர்ந்த நன் நடையும், நேர் கொண்ட பார்வையும்' அவரது அதிபர் பதவிக்கு அணிகலன் செய்தன. இவர் யாருக்கும், எதற்கும் நேருக்கு நேர் முகம் கொடுத்து நடந்து மாணவர், ஆசிரியரை வழிநடத்தி கற்றல், கற்பித்தல் சிறப்புற மேலோங்க வகை செய்தவர். அழகு, கம்பீரம் என்ற இயற்கைக் கொடையோடு நல்ல வகையிலே உடை அணிந்து இவர் எப்பொழுதும் மிடுக்காகக் காணப்படுவார். தலையிலே தொப்பி; கையிலே சிறிய தோற்பெட்டி; அவரது தோற்றத்துக்கு மெருகூட்டி உத்தியோகத் தோரணையை மேலும் கடுமையாக்கிக் காட்டும். முகத்திலே சிரிப்பு, பிரச்சினைகளைச் செவிமடுக்கின்ற முறையே ஒரே அலாதிதான்.

### கல்வி, விளையாட்டு

திரு.சி.பி.தாமோதரன் காலத்தில் வளர்க்கப்பட்ட விளையாட்டுத் துறையை மங்க விடாமல் காப்பாற்றியதோடு இவர் கல்வித் தரத்தையும் மேலோங்கச் செய்ய சகல முயற்சிகளையும் மேற்கொண்டார். ஆசிரியர்களைத் தெரிவு செய்வதில் மிகக் கரிசனை காட்டினார். யாழ்.மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் சென்று கல்லூரித் தேவைகளுக்கேற்ற ஆசிரியர்களை விசாரித்துத் தேர்ந்தெடுத்து அழைத்து வந்தார். அப்படி வந்தவர்கள் விடுதியில் தங்கியும் மேலதிக நேரங்களில் தங்களை அர்ப்பணித்தும் உழைத்தமையால் அந்த அறுவடையின் பயனை மாணவர் பெற, பெற்றோர் மகிழ அதிலே தானே தனது முயற்சிகளையிட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

### தூய்மை, வாய்மை

தனது 91 ஆண்டு கால வாழ்க்கையின் மாணவ, ஆசிரிய, அதிபர் பதவி இன்னோரன்னவற்றின் மூலம் பெரும் பகுதியை ஹாட்லியுடன் இணைத்துக் கொண்ட இப் பெருமகனார் தனது குடும்ப வாழ்க்கையிலே இரு பெண் செல்வங்களையும் ஒரே மகனையும் பெற்று நிறைந்து வாழ்ந்தார். அவரது வாழ்க்கைத் தூய்மை இறுதிவரை துணைவியாரை அருகிலே இருக்க வைத்தது. முன்னர் தான் வாங்கிய காணித்துண்டொன்றையும் விளையாட்டு மைதானப் பெருக்கத்திற்கு மகன் மூலம் அன்பளிப்பு செய்ய முற்பட்டவர்.

அவர் ஒரு கர்மவீரனாக வாழ்ந்து காட்டியமையால் அவர் வளர்த்த ஆலவிருட்சம் கிளை பரப்பி, விழுதுவிட்டு வேரூன்றி விட்டது. உலகின் எல்லாப் பகுதிகளிலும் பழைய மாணவர்கள் கிளை அமைத்து தமது கல்வித்தாயை ஊட்டி வளர்த்து வருகிறார்கள்.

அவர்தம் ஆன்மா சாந்தியடைய இத்தனை
சாதனைகளும் போது மென்பதால் நாமும்
இன்றைய நாளில் பிரார்த்தனை செய்வோம்!
'ஞானம் மிளிர்க'

*– ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்.*

### THE LATE MR.K.POORANAMPILLAI A TRUE DISCIPLINARIAN

Mr.K.Pooranampillai who dedicated himself for the uplift of the society particularly in the region of Vadamaradchy, through his untiring service in the sphere of education at J/Hartley College, Point Pedro.

His gracious memories will be instilled a fresh forever in the minds of everyone regardless of caste, creed or religion. Being a veteran teacher and an efficient adninistrator as well as a good disciplinarian the Hartley College and the replica of the lofty ideals of Mr.K.Pooranampillai are inseparable.

The late Mr.K.Pooranampillai was so concemed of the academic well being of the students that be kept his heart and mind as a receptacle filled with all back ground information of all students and their parents. He took keen interest in directing the students on the right track according in their aptitude and distinct abilities. He was reputed remarkably for his Vision in forseeing the scope of his students and guiding them properly to fit into any surrounding of the society inorder to mould them into competitive citizens. He had the objective of producing students who were well versed with international affairs and thus he always emphasized on the proficiency of the English language, through which a broad volume of knowledge could be acquired.

He had the miracutous prophosy in the presently well known concept of globalisation and hence his reputed insistence of the idea of unification with regard to societal views leading to compromise and cooperation.

As a part of his administrative strategy he always targetted a small number of students (800 or so) to be admitted to the school so as to facilitate the upkeep of the management and subsequently to secure a significant academic output.

**M.Nadarajasundaram,**
**President, PPA, Point Pedro,**
**SriLanka.**

### ஆற்றிய பணியை அயராது தொடர்ந்தால்.....

மாணவன், ஆசிரியன், அதிபர், பழையமாணவர் மன்றப் போஷகர் என நான்கு முறைகளிலே ஹாட்லி சமுதாயத்தின் செழுமைமிகு எழுச்சிக்கு அயராது எண்ணிப் பணியாற்றியவர் பூரணம்பிள்ளையவர்கள். அத்துடன், தான் கையேற்ற ஹாட்லி சமுதாயத்துக்கான பணியை அர்ப்பணிப்பு, தியாகம், நேர்மை, விடாமுயற்சி ஆகியன நன்கு செறிய உழைத்து ஹாட்லி சமுதாயத்தைச் சிறப்புற மேன்மை செய்தவர். பூரணம்பிள்ளை அவர்கள் ஆற்றிய பணியை நாம் அயராது தொடர்ந்தால் அது அவரது ஆன்மாவிற்கும், ஹாட்லி சமுதாயத்துக்கும் பொதுவாக மனுக்குலம் மாண்புபெறுவதற்கும் வழி பல சமைக்கும்.

'ஒளியொருவற்குள்ள வெறுக்கை'

எம்.சிறீபதி,
*அதிபர்,*
*ஹாட்லிக் கல்லூரி.*

(C/16782)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

அனுபவம் மிக்க ஆசிரியர் அம்பிகைபாகனின் புதிய புத்தகம். ஆண்டு 5 புலமைப்பரிசில் 2001-2002. அடிப்படைக் கல்வியும் தரமான பயிற்சிகளும் அடங்கியது. சென்ற ஆண்டு வினாப்பத்திரமும் விடைகளுடன் தரப்பட்டுள்ளன. விலை ரூபா 240/= பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (87997)

### G.C.E (A/L) MATHS

மதியழகன் எழுதிய "ஆள்கூற்றுக் கேத்திர கணிதம்." **G. C.E (A/L) Maths** மாணவர்களுக்கு இணைந்த கணிதத்தில் உள்ள ஆள் கூற்றுக் கேத்திர கணிதத்தைத் தெளிவாக விளக்கும் நூல். விலை ரூபா **200/=**. பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (87998)

### வாழ்த்துமடல்கள்

புத்தம் புதிய டிசைன்களிலான வண்ணமிகு **Birthday Cards, Wedding Cards** என்பன விற்பனையாகின்றன. தொகையாக வாங்குபவர்களுக்கு விசேட கழிவு தரப்படும். பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (87996)

### புறொயிலர் விற்பனைக்கு

இறைச்சிக்கோழி புறொயிலர் **(BROILER)** விற்பனைக்குண்டு. சுத்தம் செய்யப்பட்டது. 1 கிலோ 240/-, உயிருடன் 1Kg 150/- வாடிக்கையாளருக்கு மேலும் விலைக்கழிவு வழங்கப்படும். தொடர்பு: இல.310, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். **(S.M** பெர்ணான்டோ கண்ணாடிக் கடைக்கு அருகில்.) (88002)

### தவறிவிட்டது

பளை, வீமன்காமம் என்னும் முகவரியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை கோகுலநாத் என்பவரது தேசிய.அ. அட்டை (இல.552732235V), விசேட அ.அட்டை இரண்டும் ஓட்டுமடத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திருமதி வி.நந்தினி, மே/பா திரு.N.சிவபாலு, கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (88042)

### பணிப்பெண் தேவை

கௌரவமான குடும்பத்திற்கு வீட்டுப்பணிப் பெண் தேவை. தொடர்பு: இல. 341/2, கோயில் வீதி, நல்லூர். (88010)

### விற்பனைக்கு

நெல்லியடி, திக்கம் றோட்டில், வதிரி உல்லையன் நல்லை அம்மன் கோயிலுக்கு அருகில், யாழ். நெல்லியடி மெதடிஸ்த மி.த.கலவன் பாடசாலை ஒழுங்கையில் சுந்தரலிங்கம் விதானையார் வீட்டில் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நவீனரக கல்யாணக்கூறைகள், காஞ்சிபுரச் சேலைகள், கல்யாண நடன மேக்கப் செற் மற்றும் பல. தொடர்பு: சு.சுந்தரலிங்கம் விதானையார், ஆடுபாவத்தை வதிரி, கரவெட்டி. (87969)

கோல்ட் ஸ்ரார் இரட்டைக் கதவு குளிர்சாதனப் பெட்டியும் **ROBIN EY 20** நீர் இறைக்கும் இயந்திரமும் (மிக நல்ல நிலையில்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 639, நாவலர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். (87962)

யமகா மோட்டார் சைக்கிள் **(MATE 90)** ஜெனறேற்றர் (யமகா 600 **H.P)** மற்றும் மீன் தொட்டி (மீன்களுடன்) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 20, சுண்டிக்குளி பாடசாலை அருகே, பாற்சாலை அருகில், யாழ்ப்பாணம். (87989)

**5kW** லிஸ்ரர் இன்ஜின் **4kW** லிஸ்ரர் இன்ஜின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்:- சாருஜன், கே.கே.எஸ். றோட், கொக்குவில். **T.P.021-2961** (88040)

### இலக்கியக் கட்டுரைகள்

'ஓர் ஆசிரியர் பென்ஷன் எடுக்கிறார்' நாடகத்தை வானொலியில் கேட்டீர்களா? அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை "சஞ்சீவியில்" எழுதிய சிறுகதையைத்தான் நாடகமாக்கியிருக்கிறார். அவரது இலக்கியக் கட்டுரைகள் நூலை வாசித்துப் பயனடையுங்கள். (88012)

### வீடு வாடகைக்குண்டு

புதிய வீடு ஒன்று, கல்வியங்காட்டுச் சந்தியில் இருந்து 300 யார் தொலைவில் வாடகைக்கு உண்டு. தொடர்பு:- து.மகேந்திரன், இல.680/1, கே.கே.எஸ் வீதி, (கமலா வைத்திய நிலைய முன் ஒழுங்கை) நாச்சிமார் கோயிலடி. (88013)

### உடன் விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்கு உகந்த மரத்தளபாடங்கள், எவர்சில்வர் பொருள்கள், **K.D.K. FAN, Sony Radio, Rice Cooker** என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 639/2, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (88045)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம் 05.05.1951 உரும்பிராய்

அஸ்தமனம் 21.05.2000 ஜேர்மனி

### சுப்பிரமணியம் குகதாஸ்

அவர்கள்

கதிர்காமக் கந்தன் திருவருள் வேண்டிப் பெற்ற மகனே! அந்தக் கந்தன் திருநாமம் பூண்டவனே! உன் பாசமுள்ள மனைவி, மக்கள், உடன்பிறப்புக்கள், பெறாமக்கள், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் மறந்து வந்துவிடு என்று அரைமணியில் உமது உயிரைப் பறித்துச் சென்றவர் யார்? என்னை நான் முற்றாக மறக்கும் நாள் வந்தால் தான் உம்மை என்னால் மறக்க முடியும். - அம்மா

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

"பிரபை மஹால்"
*உரும்பிராய்ச் சந்தி,*
*உரும்பிராய்.*

தாய், சகோதரர்கள், குடும்பத்தினர். (88016)

# தொடரும் யுத்த நிலைமை காரணமாக

# வடபகுதியில் 10 வருடங்களுக்கு மேலாக வெறுமையாகத் தென்னைநாற்று மேடைகள்

யாழ்ப்பாணம்,மே21

தொடரும் யுத்தத்தினால் வடபகுதியிலுள்ள தென்னை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான மூன்று தென்னைநாற்று மேடைகளில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக உற்பத்தி எதனையும் மேற்கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வட்டக்கச்சியில் 20 ஆயிரம் தென்னம் நாற்றுக்களையும், அலம்பிலில் (முல்லைத்தீவு) 30 ஆயிரம் தென்னை நாற்றுக்களையும், அச்சுவேலியில் 40 ஆயிரம் நாற்றுக்களையும் உற்பத்தி செய்யக்கூடிய தென்னைநாற்று மேடைகள் இருக்கின்றன.

இந்த நாற்றுமேடைகளில் இருந்து கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் வருடாவருடம் 50 ஆயிரம் தென்னை நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு 40 ஆயிரம் நாற்றுகள் நடுகை செய்யப்பட்டு வந்தன.

தற்பொழுது இந்த உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதால் அழிந்து போகும் தென்னைகளுக்கு ...ற்றீடாக மீள் நடுகை செய்ய... யாத நிலை ஏற்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டுக்கும் 1998க்கும் இடைப்பட்ட காலத்தில் மட்டும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் தென்னை மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகத் தென்னை அபிவிருத்திச் சபையின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

1999இல் இருந்து இன்று வரை அழிந்துள்ள தென்னை மரங்களின் விவரம் பற்றி சரியான கணக்கெடுப்பு நடத்தப்படாத போதிலும் இந்தக் காலத்தில் மிகவும் கூடுதலான தென்னை மரங்கள் அழிந்துள்ளதாகத் தெரியவருகிறது.

யுத்தத்தினால் அழிந்து போன தென்னை மரங்களுக்கு ஈடாக தற்பொழுது வருடா வருடம் ஒரு லட்சம் தெனனை நாற்றுக்கள் புனர்நடுகை செய்யப்பட வேண்டும் என தென்னை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு செய்கை பண்ணப்படாது விட்டால் தென்னை உற்பத்தி பாதிக்கப்பட்டு எதிர்காலத்தில் தேங்காய்க்கு பெரியளவில் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (க-5)

## குடிதண்ணீர் விநியோகம் குறித்த பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,மே21

குடாநாட்டில் குடிதண்ணீர் விநியோகத்தைச் சீரமைக்கும் வகையில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் முழுநாள் பயிற்சிப் பட்டறை நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் குடி தணணீர் விநியோக அதிகாரிகள் மற்றும் குடிதண்ணீர் பாவனையாளர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வர். (க-4)

## ரீ.வி., ஜெனறேற்றர் அன்பளிப்பு

காரைநகர்,மே21

காரைநகர் விளானை சனசமூக நிலையத்துக்கு ரீ.வி. ஒன்றையும் ஜெனறேற்றர் ஒன்றையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் வழங்கியுள்ளனர். இவற்றின் பெறுமதி ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபாவாகும்.

இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை விளானை சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந.மதனராஜா நிலையத் தலைவர் கா.குலசேகரத்திடம் இவற்றைக் கையளித்தார். (ம-73)

## மட்டுவில் பகுதி ஆலயங்களுக்கு அமைச்சுக் குழு

யாழ்ப்பாணம,மே21

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்குகிழக்கின் தமிழ் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் மட்டுவில் பிரதேசத்திற்குச் சென்ற குழுவினர், அங்கு யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்த ஆலயங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

அமைச்சின் பிரதிநிதிகள், ஈ.பி.டி.பி.யின் இந்துசமய விவகாரப் பொறுப்பாளரும் வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவருமான ந.திரிலோகநாதன், ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சிப் பொறுப்பாளர் அலெக்ஸ்சாண்டர் சாள்ஸ் ஆகியோர் ஆலயங்களைப் பார்வையிடச் சென்ற குழுவில் இடம்பெற்றிருந்தனர். 52 ஆவது படையணியின் மேஜர் வியாப்பா குழுவினரை மட்டுவில் பிரதேசத்துக்கு அழைத்துச் சென்றிருந்தார். (க)

## 'சிஹல உறுமய' கடும் எதிர்ப்பு

கொழும்பு,மே21

விஞ்ஞானப் பாடங்களை ஆங்கில மொழிமூலம் கற்பிப்பது என்ற அரசின் தீர்மானத்தை 'சிஹல உறுமய' முழுமையாக எதிர்க்கிறது என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

கட்சியின் இளைஞர் முன்னணியான 'ஜாதிக யொவுண் சவிய' இதனை எதிர்த்து ஒரு போராட்டத்தைச் செய்யவிருக்கிறது என்றும், அரசின் இந் நடவடிக்கையால் இளைய தலைமுறையினர் தமது தாய் மொழியில் கல்வி கற்கும் அடிப்படை உரிமையை இழந்து விடுவார்கள் என்றும் 'சிஹல உறுமய' தெரிவித்துள்ளது. (க)

## 50ஆயிரம் முளை தேங்காய்கள் கப்பலில் எடுத்துவர ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே21

தென்னை அபிவிருத்திச் சபையினால் யாழ்.மாவட்டத்துக்கு 50 ஆயிரம் முளை தேங்காய்கள் தென்னிலங்கையில் இருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்தே இந்த விதை தேங்காய்களை மேற்படி சபை அனுப்பி வைப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது என்று தென்னை அபிவிருத்திச் சபையின் யாழ்.அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

50 ஆயிரம் முளை தேங்காய்களும் கமநல சேவைத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டு நாற்று மேடைகளில் போடப்பட்டு பின்னர் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

மூன்றரை வருடகாலத்தில் பயன் தரும் 25 ஆயிரம் முளை தேங்காய்களும், 5 வருடத்தில் பயன் தரும் நெடிய உயர் இனவர்க்கத்தைச் சேர்ந்த 25ஆயிரம் முளை தேங்காய்களுமே இவ்வாறு அனுப்பி வைக்கப்படவுள்ளன. (க-5)

### ஐ.தே.கவும் புலிகளும் இணைந்து சதி

## அரசாங்கத்தை எவராலும் அசைக்க முடியாது என்கின்றார் மங்கள

கொழும்பு,மே21

"எமது பொதுஜன முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்கக முடியாது. எமது அரசு இன்று கவிழும் நாளை கவிழும் என்று பலர் எதிர்பார்த்திருக்கின்றார்கள். ஆனால் எமது அரசை எவராலும் கவிழ்க்க முடியாது" என்று நகர அபிவிருத்தி கட்டட நிர்மாணத் துறை பொதுவசதிகள் அமைச்சர் மங்களசமரவீர நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இலங்கை முதலீட்டுச் சபையின் அனுசரணையுடன் தேசிய ரீதியில் அமைக்கப்பட்டுவரும் தகவல் தொழில நுட்ப நிலையங்களில் (கம்பியூட்டர் கல்வி அடங்கலாக) நான்காவது நிலையம் மாத்தறை நகரில் திறந்து வைக்கப்பட்டது.

பிரதி நிதிஅமைச்சரும் அரசியல் யாப்பு விவகார கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் சகிதம் தகவல் தொழில்நுட்ப நிலையத்தைத் திறந்து வைத்த அமைச்சர் மங்கள சமரவீர மேலும் கூறியதாவது:-

எமது அரசைக் கவிழ்க்க பல தீய சக்திகள் முயற்சி செய்கின்றன. குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி புலிகள் இயக்கத்துடன் இணைந்து அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குச் சதி செய்கின்றது.

உலகம் முழுவதும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக இவர்கள் இருசாராரும் பிரசாரம் செய்து வருகின்றனர். இலங்கை அரசாங்கத்துக்கு கடன் உதவிகள் வழங்க வேண்டாம் என்றும் அவர்கள் வெளிநாடுகளில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.(க)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 26 - 11 - 1917



மறைவு 22 - 04 - 2001

### திருமதி தங்கலட்சுமி இராசையா

(ஓய்வு பெற்ற ஆசிரியை, அரியாலை)

22.04.2001 அன்று சிவபதம் அடைந்த எமது குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு, நாளை (22.5.2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
*136, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை.*

தற்காலிக முகவரி:
*26, முதலியார் கனகசபை வீதி, மானிப்பாய்.*

பிரிவால் துயருறும்
பண்டிதர் சி.இராசையா
குடும்பத்தினர்

(87891)

# தமிழக அரசியலில்...

## தமிழக ஆளுநரின் உரையை தி. மு. க. பகிஷ்கரிக்க முடிவு

சென்னை, மே 21

எதிர்வரும் 25 ஆம் திகதி புதிய சட்டமன்றக் கூட்டத்தைத் தொடக்கி வைத்து, தமிழக ஆளுநர் பாத்திமா பீவி உரையாற்றும்போது, அதனைப் பகிஷ்கரிக்க தி.மு.க முடிவு செய்துள்ளது

இவ்வாறு சென்னையில் செய்தியாளர்களிடம் கருணாநிதி தெரிவித்தார்.

முன்னர் ஜெயலலிதா மீது ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் வழக்குகள் தொடர அனுமதி வழங்கிய ஆளுநர் இன்று அதே ஜெயலலிதாவை முதல்வராக அனுமதித்திருப்பது அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்று கருணாநிதி கூறினார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே புதிய சட்டமன்றத்தின் ஆளுநர் உரையை புறக்கணிக்க முடிவு செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ)

### ம.தி.மு.க. விலகாதிருந்தால்

## தி. மு. க. கூட்டணிக்கு மேலும் 30 இடங்கள் கிடைத்திருக்கும்

### தமிழகப் பத்திரிகைகள் கருத்து

சென்னை, மே 21

நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் தி. மு. க கூட்டணியில் ம. தி மு. க அங்கம் வகித்திருந்தால், மேலும் 30 தொகுதிகளில் அந்தக் கூட்டணி வெற்றி பெற்றிருக்கும் என்று தமிழகப் பத்திரிகைகள் தெரிவித்தன.

213 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்ட ம. தி. மு. க 13 லட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளது.

இவற்றில் சுமார் 30 தொகுதிகளில் தி.மு க பெற்ற வாக்குகளுடன், ம. தி. மு. க பெற்ற வாக்குகளைச் சேர்த்தால், அத்தொகுதிகளில் வென்ற அ. தி மு. க கூட்டணி பெற்ற வாக்குகளை விட, அதிகமாக இருப்பதாகவும்—

அப்படி 30 இடங்கள் தி. மு க கூட்டணிக்குக் கிடைத்திருந்தால், அ. தி. மு. க அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியாது போயிருக்கும் என்றும்— பத்திரிகைகள் கூறியுள்ளன.

இது ஒரு புறமிருக்க, தமிழகத்தின் 12ஆவது சட்டசபை எதிர்வரும் 25 ஆம் திகதி கூட உள்ளது. அந்தச் சட்டசபையில் கருணாநிதியும், அன்பழகனுமே மூத்த உறுப்பினர்கள் ஆவார்கள்.

(ஒ)

## முதல்வர் பணியின் பளுவால் ஆஜராக இயலவில்லை

### ஜெயலலிதா நீதிமன்றுக்கு மனு

சென்னை, மே 21

தன் மீது வருமானத்துக்கு மீறிய வகையில் சொத்துக் குவித்ததாகத் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைக்கு, முதல்வரானதால் வரமுடியவில்லை என்று ஜெயலலிதா மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தனி நீதிமன்றத்தில் மேற்படி வழக்கு விசாரணைக்கு வந்த போது ஜெயலலிதா தரப்பில் ஆஜரான சட்டத்தரணி இந்த மனுவைச் சமர்ப்பித்தார்.

விசாரணையில்எதிரியான ஜெயலலிதாவை சாட்சிகள் அடையாளம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றும் —

முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள ஜெயலலிதா தமிழக அரசின் அன்றாடப் பணிகளைக் கவனிக்க வேண்டிய முக்கிய கடமையிருப்பதால் நீதிமன்றத்துக்கு வர இயலவில்லை என்றும் — அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது

(ஒ)

### கடந்த தேர்தலில் போட்டியிடாத

## காங்கிரஸ் முக்கிய பிரமுகர் பாண்டிச்சேரியில் முதல்வர்

சென்னை. மே 21

பாண்டிச்சேரி முதலமைச்சராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ப. சண்முகம் பதவியேற்க உள்ளார்.

நேற்று முன்தினம், சட் சபை காங்கிரஸ் கட்சித் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்னர் பாண்டிச்சேரி ஆளுநர் ரஜினிராயை சந்தித்து ஆட்சி அமைக்க ப. சண்முகம் உரிமை கோரினார்.

பாண்டிச்சேரியின் முன்னாள் முதலமைச்சரான ப. சண்முகம், நடந்து முடிந்த தேர்தலில் போட்டியிடவில்லை.

ஆகவே, முதலமைச்சராக அவர் பதவியேற்றாலும், 6 மாத காலத்துக்குள் இடைத்தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினராக வேண்டும்.

(ஒ-9)

# ஆயுதங்களைக் கைவிடுவதற்கு அல்பேனியர்களுக்கு அவகாசம்

## யூகோஸ்லாவியா விதித்தது

புஜனோவிக், மே 21

செர்பியாவின் தென்பகுதியில் உள்ள அல்பேனியத் தீவிரவாதிகள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்குள் தமது ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென்று யூகோஸ்லாவியா காலக்கெடு விதித்துள்ளது.

அல்பேனியத் தீவிரவாதிகள் விதிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் ஆயுதங்களைக் கைவிடாவிட்டால் யுத்த சூனியப் பிரதேசத்துக்குள் நுழைய யூகோஸ்லாவிய இராணுவத்துக்கு 'நேட்டோ' அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது.

இதே சமயம் தாம் தற்போது உள்ள பிரதேசத்துக்குள் யூகோஸ்லாவியப் படைகள் நுழைந்தால் அவை கடுமையான தாக்குதல்களை எதிர்கொள்ள நேரிடும் என்று அல்பேனியத் தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர்.

1999 ஆம் ஆண்டு நிகழ்ந்த கொசோவோ யுத்தத்தின் பின்னர் கொசோவோவின் ஒரு பகுதியை 'நேட்டோ' அமைப்பு இராணுவ சூனியப் பிரதேசமாக பிரகடனப்படுத்தியது. எதிர்வரும் 24 ஆந்திகதிம் இந்தப் பகுதிக்குள் நுழைய யூகோஸ்லாவியப் படைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தென்செர்பியாவில் அல்பேனிய இனத்தவர்கள் அதிகம் வாழும் பகுதிகளை ஐ.நா கட்டுப்பாட்டில் உள்ள அல்பேனிய மாகாணமான கொசோவோவுடன் இணைப்பதற்காகவே அல்பேனியத் தீவிரவாதிகள் போராடி வருகின்றனர். இதனை யூகோஸ்லாவிய அரசு எதிர்த்து வருகிறது.

(ஒ)

## கிறிஸ்தவக் குருமார் மூவர் சுட்டுக் கொலை

இம்பாலா, மே. 21

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் கடந்த புதன்கிழமை இரவு 8 மணிக்கு டொன் பொஸ்கோ பயிற்சிப பாடசாலை விடுதிக்குள் நுழைந்த இளைஞர் கும்பல் ஒன்று. அங்கிருந்த இரு அருட்தந்தையர்களையும், ஒரு அருட்சகோதரரையும் சுட்டுக் கொன்றது

(ஒ)

## பிரிட்டிஷ் துணைப் பிரதமர் சண்டித்தனம்!

லண்டன், மே 21

பிரிட்டிஷ் துணைப் பிரதமர் ஜோன் பிரஸ்காட் தன் மீது முட்டை எறிந்து எதிர்ப்பைத் தெரிவித்த ஒருவரை கையால் குத்தித் தாக்கினார்.

அடுத்த மாதம் தேர்தலைச் சந்திக்க உள்ள ஆளும் லிபரல் கட்சி, துணைப் பிரதமரின் இந்தச் செயலால் சங்கடத்துக்கு உள்ளாகியுள்ளது

(ஒ)

## பிரிட்டனில் தொழிற்கட்சிக்கு அதிக ஆதரவு

லண்டன், மே 21

பிரிட்டனில் அடுத்த மாதம் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஆளும் தொழிற்கட்சிக்கு 54 சதவீதமும், பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ்கட்சிக்கு 26 சதவீதமும், மற்றொரு எதிர்க்கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சிக்கு 14 சதவீதமும் ஆதரவு இருப்பதாகக் கருத்துக் கணிப்புகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

## சோமாலியாவில் பஸ்ஸில் தீப்பற்றி 30 பேர் பலி!

சோமாலியாவில் பஸ்பயணி எடுத்துச் சென்ற வெடிப்பொருள்கள் வெடித்து தீப்பற்றியதில் அந்த பஸ்ஸில் பயணம் செய்த 30 பேர் பலியாகியதாகக் கூறப்படுகிறது.

இதேசமயம், விபத்து இடம்பெற்ற பஸ்ஸில் கண்ணிவெடிகள் எடுத்து வரப்பட்டதாகவும் — அவை வெடித்ததாலேயே உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும் மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

## கூழ் முட்டை வீச்சுக்கு இலக்கான பில் கிளின்ரன்!



வார்சோ, மே21

அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்ரன் கூழ் முட்டைத் தாக்குதலுக்கு இலக்கானார்.

போலந்துத் தலைநகர் வார்சோவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் 'உலக மயமாதல்' குறித்து உரையாற்ற மேடைக்குச் சென்று கொண்டிருந்த போதே கிளின்ரன் மீது முட்டை வீசப்பட்டது.

உலக மயமாதலை எதிர்க்கும் நபரொருவரே கிளின்ரன் மீது முட்டையை வீசினார்.

இதனால் கிளின்ரனின் மேலங்கி(கோட்) அழுக்கானதாகவும் — ஆனால் அதனைக் கழற்றி விட்டு மேடைக்குச் சென்று உரையாற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் இந்தச்சம்பவம் குறித்துக் குறிப்பிடுகையில் தன் மீது முட்டை எறிந்தவருக்கு சரியாகக் குறிபார்க்கத் தெரியவில்லை என்று கிளின்ரன் வேடிக்கையாகத் தெரிவித்தார்.

### மருத்துவ தேவைகளுக்குப் பயன்படுத்த

## செயற்கையாகப் பாம்பு விஷம் பிரேஸிலில் கண்டுபிடிப்பு

பிரேஸில் நாட்டு விஞ்ஞானிகள் மருத்துவ சிகிச்சைக்குப் பயன்படுத்தக் கூடிய செயற்கையான பாம்பு விஷத்தைக் கண்டுபிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவத் தேவைகளுக்கான பாம்பு விஷத்தைப் பெறுவது கடினமாக இருப்பதால் செயற்கை முறையில் அதனைத் தயாரிக்கும் ஆராய்ச்சியில் பிரேஸிலில் உள்ள புட்டான்ஷான் நிறுவன விஞ்ஞானிகள் 1994 ஆம ஆண்டுமுதல் ஈடுபட்டு வந்தனர்.

இந்த முயற்சியில் தாங்கள் பாதித்தூரம் சென்றுவிட்டதாகவும், செயற்கைப் பாம்பு விஷத்தை உற்பத்தி செய்யும் முறையைத் தாங்கள் கண்டுபிடித்து விட்டதாகவும் தற்போது விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பாம்பின் விஷம் இருக்கும் உமிழ்நீர்ச்சுரப்பிகளைவிருத்தி அடையச் செய்வதில் விஞ்ஞானிகள் வெற்றி பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற செயற்கைப் பாம்பு விஷத்தைத் தயாரிப்பதில் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளின் விஞ்ஞானிகளும் ஈடுபட்டு வருகின்றனர்.

(ம)

## கொங்கோவில் அமைதி முயற்சி

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் அமைதியை ஏற்படுத்த ஐ நா. பாதுகாப்புச் சபையின் 12 பேரடங்கிய குழுவின் தலைமையில் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

ஜனாதிபதியாக இருந்த ஜோசப் கபிலா சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் அரசுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே முதல் தடவையாக மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சி இதுவாகும்.

## இலங்கைப் பிரச்சினை குறித்து ரஜனி சொன்ன குட்டிக்கதை

சென்னை, மே 21

சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற 'தெனாலி' திரைப்பட வெற்றி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய நடிகர் ரஜனிகாந்த் இலங்கை பற்றிக்கூறிய கதை இது:

சிவபெருமானிடம் தண்ணீருக்கு நடுவில் ஒரு அரண்மனை வேண்டுமென்று பார்வதி கேட்டார் மலை சூழ்ந்த இடத்தில்தான் நாம் வசிக்கவேண்டும் என்று சிவன் மறுக்கவே பார்வதி அடம்பிடித்தார்.

அதனால் கடலின் நடுவே ஒரு அழகான அரண்மனையைச் சிவன் சிருஷ்டித்துக் கொடுத்தார்.

அந்த அரண்மனைக்குக் கிரஹப்பிரவேசம் செய்து வைக்கச் சிவபக்தனான ராவணனை அழைத்தனர், அவனும் வேதமந்திரங்கள் ஓதிச் சிறப்பாக யாகம் நடத்தினான். அதனால் மகிழ்ந்த பார்வதி வேண்டியதைக் கேட்கும்படி ராவணனிடம் கூறினார். ராவணனோ அந்த அரண்மனையே வேண்டுமென்று கேட்டான்.

வரத்தை மறுக்க முடியாமல் அரண்மனையைக் கொடுத்த பார்வதி எப்போதும் அந்தப் பகுதி எரிந்து கொண்டே இருக்கும். நிம்மதி இருக்காது என்று சாபத்தையும் சேர்த்தளித்தார்.

அதனால்தான் அன்று முதல் இலங்கை எப்போதும் எரிந்து கொண்டிருக்கிறது.

(ஒ)

# தென்மராட்சி அதிபர், ஆசிரியருக்கு சொத்து இழப்பு நஷ்டஈடு வழங்குக!

## தமிழர் ஆசிரியர் சங்கம் டக்ளஸிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 21

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்திருக்கும் சகல அதிபர், ஆசிரியர்களுக்கும் அவர்கள் இழந்த சொத்துக்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் வடக்கு — கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்த சமயம் மேற்கண்ட கோரிக்கையைச் சங்கத்தினர் விடுத்தனர்.

இந்தச் சந்திப்பின் போது விடுக்கப்பட்ட சில கோரிக்கைகள் ஏற்கனவே உதயனில் வெளியாகியிருந்தன.

ஏனைய முக்கிய கோரிக்கைகள் வருமாறு:-

★ அண்மையில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருந்து வெளியேறிய ஆசிரியர்களைக் குறைந்தது 3 வருடங்கள் தீவகக் கல்வி வலயத்தில் கடமையில் ஈடுபடுத்த வேண்டும்.

★ கல்வி அமைச்சின் அண்மைக்கால சுற்றறிக்கைக்கு அமைவாக சகல ஆசிரியர்களும் குறைந்தது 03 வருடகாலம் கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்றுதல வேண்டும் எனவே சுழற்சி முறையான ஓர் இடமாற்றத் திட்டம் அமைத்து தீவகக் கல்வி வலயத்தின் ஆசிரிய பற்றாக் குறையை நீக்க நடவடிக்கை எடுக்கவும் திட்டம் தயாரிப்பதில் எமது சங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கும்.

★ புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக கணனி மூலக் கல்வி என்பது யாழ் மாவட்டத்தில் பூரணமாக நடைமுறைப்படுத்தவில்லை. எனவே பொருத்தமான பாடசாலைகள் யாவற்றுக்கும் கணனியை வழங்கி இத் திட்டத்தை நிறைவேற்ற ஆவன செய்யவும் இதன் மூலம் யாழ் மாணவர்கள் சர்வதேச கல்வித் தொடர் பாடல்களை அறிய வாய்ப்பு ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். முதல் கட்டமாக தரம் 11 வரை உள்ள பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கப்படல் வேண்டும்.

★ யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கபபட்டு அது தனது முதலாவது வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ளது ஆனால் இக்கல்லூரி இன்று வரை தனக்கென கட்டடம் இல்லாமல் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையுடன் சேர்ந்திருப்பதனால் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றது. எனவே இதற்கென ஒதுக்கப்பட்டுள்ள காணியில சகல வளங்களுடன் இவ்வருட இறுதிக்குள் கட்டடம் அமைக்கப்பட்டு சுதந்திரமாக இயங்க ஆவன செய்யுமாறு கோருகின்றோம்.

★ நாடகமும் அரங்கியலும் என்ற பாடம் தற்போது தரம் 10 இல் பாடசாலைகளில் கற்பிக்கபபடுகின்றது. இப்பாடத்தைக் கற்பிப்பதற்கு இப்பாடத்தில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடுள்ளது. எனவே கல்வியியற் கல்லூரியில் இப்பாடத்திற்கான பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு இப் பாடத்தை பாடசாலைகளில் கற்பிப்பதற்குரிய ஆசிரியர்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

★ பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையும், முத்துத்தம்பி ம. வித்தியாலயமும் ஒரே இடத்தில் நடைபெறுவதினால் இரண்டு நிறுவனமும் பல கஷ்டங்களுக்கு முகம் கொடுத்துவருகின்றன. ஆ. ப. கலாசாலை சகல வளங்களுடன் நாட்டின் மற்றைய பகுதிகளில் இயங்குகின்றன. எனவே இப் பயிற்சிக்கலாசாலையை தனியான ஓர் இடத்திற்கு எடுத்துச் சென்று சகல வசதிகளுடன் இயங்க ஆவன செய்தல் வேண்டும். இதன் மூலம் முத்துத்தம்பி ம. வித்தியாலயமும் சுதந்திரமாக இயங்க வாய்ப்பு ஏற்படும்.

**ஆசிரிய மையங்கள்**

★ எதிர்காலத்தில் ஆசிரியர்களை சகல துறைகளிலும் பயிற்சியளிக்கக்கூடிய ஆசிரிய மையங்கள் யாழ் மாவட்டத்தில் பூரணமான முறையில் இது வரை உருவாக்கப்படவில்லை ஐந்து வலயங்களுக்கும் சகல வசதிகளுடன் ஒவ்வோர் ஆசிரிய மையம் விரைவில் உருவாக்கப்பட்டு ஆசிரியர்கள் வாண்மை விருத்தியடையச் செய்தல் வேண்டும்

★ பாடசாலையில் பதில் கடமைபுரியும் அதிபர்களைக் குறிப்பிட்ட சேவைக் காலம் வரையறுக்கப்பட்டு இலங்கை அதிபர் சேவைக்குள் உள்வாங்கும் நடவடிக்கையை வடக்கு —கிழக்கு மாகாண கல்வி அமைச்சைத் தவிர நாட்டில் உள்ள மற்றைய மாகாணக் கல்வி அமைச்சுக்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. இவ் விடயத்தில் வட கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அசமந்தப் போக்கினைக் கடைப்பிடித்து வருகின்றது. இந்த நிலை நீக்கப்பட்டு பதில் கடமைபுரியும் அதிபர்களை நிரந்தர அதிபர் சேவைக்குள் உள்வாங்க நடவடிக்கை எடுக்கவும்.

★ ஐந்து கல்வி வலயங்களிலும் பலதுறை ரீதியான பாடங்களுக்கு பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக நீண்டகாலமாக பலர்கடமை புரிந்து வருகின்றனர். இவர்களையும் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் உள்வாங்குவதற்கு வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் உரிய நடவடிக்கைகள் இது வரை மேற்கொள்ளப்படவில்லை ஏனைய மாகாணங்களில் இப்பதவிகளில் உள்ளவர்கள் நிரந்தர சேவைக்குள் உள்வாங்கபபட்டுள்ளனர். இவர்களோடு சேவையில் சேர்ந்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில கடமையாற்றிய தற்காலிக விரிவுரையாளர்கள் அண்மையில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் யாவும் விளம்பரபபடுத்தப்பட்டு நேர்முகப்பரீட்சை மூலம் சேவை மூப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆனால் தற்போது பல செல்வாக்குகள் பயன்படுத்தப்பட்டு தகுதிகள், சேவை மூப்பு, தராதரம் எதுவும் பாராது இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன இதனால் அதிபர்கள், ஆசிரியர்கள் மத்தியில் ஒரு விரக்தி மனப்பாங்கு ஏற்பட்டுள்ளது. எனவே எதிர்காலத்தில் நீதியான முறையில் இவ்வித நியமனங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

★ மேலதிக மாகாணக் கல்விப்பணிமனை எவ்வித அதிகாரமுமற்ற ஓர் அமைப்பாக இருந்து வருகின்றது. அதிகாரங்கள் யாவும் வடக்கு —கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் குவிக்கப்பட்டுள்ளன. இதனால் வலயக் கல்விப்பணிப்பாளர்கள் அமைச்சுச் செயலாளருடனும், மாகாணக்கல்விப்பணிப்பாளருடனும் சிறு விடயங்களுக்குக்கூடத் தொடர்பு கொள்கின்றனர். இதனால் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் தாமதமடைகின்றன. இந்த நிலையினைப் போக்க மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும். அத்தோடு சகல வசதிகளும் கொண்ட பணிமனையும் அமைக்கப்படல் வேண்டும்.

★ 1995, 1997ஆம் ஆண்டுகளின் ஜனவரி முதலாம் திகதி ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இதுவரை அவர்களின் பாக்கிச் சம்பளம் வழங்கப்படவில்லை. ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் தொகையான பணம் பாக்கிச் சம்பளமாக வழங்கவேண்டியுள்ளது. இவ் விடயத்தில் கீழ்வரும் நடவடிக்கைகள் எடுக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஏற்கனவே எமது சங்கம் கல்வி அமைச்சரோடு நடத்திய பேச்சுவார்த்தைக்கு அமைய வருடத்தில் இரண்டு தடவை கட்டம் கட்டமாக இப்பாக்கிச் சம்பளம் வழங்கப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை சகலமட்டங்களிலும் திருப்பற்றாக்குறை எனத் தெரிவிக்கப்படுகின்றது இன்றைய பொருளாதாரச் சிக்கல் நிறைந்த காலகட்டத்தில் குடும்பச்சுமை தாங்கமுடியாது ஆசிரியர்கள் பெரும் இன்னற்படுகின்றனர். காலம் செல்லச் செல்ல பாக்கித் தொகை அதிகரிக்கின்றது — எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு இடையில் ஆசிரியர்கள் இப்பாக்கிச் சம்பளத்தைப்பெற ஆவனசெய்யவும்.

2000 ஆம் ஆண்டுக்குரிய இடர்காலக்கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை. 1997 ஆம் ஆண்டுக்குரிய இறுதி ஆறுமாதகாலத்திற்கும் கிடைக்கவில்லை, கல்வி அமைச்சின் பிரதம கணக்காளருடன் தொடர்பு கொண்டு இதனைப் பெற்றுத் தர ஆவன செய்யவும். இக் கொடுப்பனவு யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு கிடைக்க ஆவன செய்யவும். தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்திருக்கும் சகல அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அவர்கள் இழந்த சொத்துக்களுக்காக நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

ஆசிரியர்களுக்கு 10 மாத சம்பள முற்பணம் பெறுவதற்கும் நிதி ஒதுக்கித்தர நடவடிக்கை எடுக்கவும்

இந்தக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநர், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, தி. மகேஸ்வரன், அ. விநாயகமூர்த்தி, வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ஐ-3)

## மக்கள் குறை நிவிர்த்தி சேவையில்

# 50 வீத சம்பளத்தைப் பெற பரந்தன் ஊழியர்கள் மறுப்பு

## காசோலைகளைத் திருப்பி அனுப்ப முடிவு

யாழ்ப்பாணம், மே 21

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு மக்கள் குறைநிவிர்த்தி சேவையில் வைத்து நான்கு மாதச் சம்பளம் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்ட போதும் இந்தச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் மறுப்பு தெரிவித்து விட்டனர்

50 சதவீத சம்பளம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் இந்தச் சம்பளத்தைப் பெறுவதற்கு மறுப்புத் தெரிவித்தனர்

இது தொடர்பாக மக்கள் குறை நிவிர்த்தி சேவையில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்த மேற்படி ஊழியர்கள் தமக்கு முழுமையான சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஊழியர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

142 ஊழியர்களுக்கு இந்தச் சம்பளத்தை வழங்குவதற்கான காசோலைகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டதாகவும் சம்பளம் பெற்றுக் கொள்ளாமையினால் காசோலைகளைத் திருப்பிக்கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பரந்தன் இரசாயனத்தொழிற்சாலைத் தலைவர் எஸ். தியாகராசா உதயனுக்குத் தெரிவித்தார். (க-5)

## சமய சந்நிதிகளில்

வலிகாமம் தெற்கு, மே 21

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான மஹோற்சவ தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

தேர்த் திருவிழாவைத் தொடர்ந்து மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை தீர்த்தத் திருவிழா நடைபெறும். வியாழக்கிழமை காலை சங்காபிஷேகம், மாலை மூன்று மணிக்கு திருக்கல்யாணம், பூங்காவனம் ஆகியவை இடம் பெறும். (க-152)

★ ★ ★

சண்டிலிப்பாய், மே 21

மாதகல் அரசடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல்11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 4 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (க-135)

## வீடமைப்புக்கென ரூ. 10 ஆயிரம் கொடுப்பனவு

தென்மராட்சி, மே 21

யாழ். மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வறுமைக் கோட்டுக்குக்கீழ்ப்பட்ட குடும்பங்களுக்கு அடுத்த வாரம் முதல் 10 ஆயிரம்ரூபா வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வீடமைப்பு நிதிக்காக வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 100 குடும்பங்கள் பிரதேச சபைத் தலைவர்களினால் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கே 10 ஆயிரம் ரூபா தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்படவுள்ளது. (க-185)

## ஹாட்லியில்

தென்மராட்சி, மே 21

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் திருச்சபை மண்டபத்துக்கு கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் க. பூரணம்பிள்ளையின் பெயரிடும் வைபவம் இன்று காலை 9 30 மணிக்கு இடம்பெறவிருக்கின்றது.

அதனைத் தொடர்ந்து நினைவுரைகளும் மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன. (உ-117)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தவப்பேறு:
08-08-1932

சிவப்பேறு:
23-05-1998

பூசனை ஈசனார்க்குப் பொழுதெலாம் செய்து வாழ்ந்த

**அமரர் சுப்பையா ஆறுமுகராசா** அவர்கள்

(கொக்குவில் பிரம்படி ஞானவைரவர் ஆலய பரிபாலகர்)

**திதி: 21 - 05 - 2001**

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து
மானிட வாழ்வை நீத்த—ஐயா!
இனிக் காண்பது எங்கே?

அன்பு மனைவி
சரோஜினிதேவி ஆறுமுகராசா

பிரம்படி, கொக்குவில். (88050)

# ஆஸி. தூதராக ஜானக பெரேரா; பல மட்டங்களிலிருந்தும் எதிர்ப்பு

கொழும்பு,மே21

இராணுவ சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ள சிரேஷ்ட அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத்தூதராக நியமிப்பதற்கு அரசு செய்திருக்கும் சிபாரிசை அங்கு செயற்படும் தமிழ் குழுக்களும் சர்வதேச மன்னிப்புச் சபையும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இலங்கையில் அவர் மனித உரிமை மீறல் செயல்களில் ஈடுபட்டிருந்தார் என்றும் -

அத்தகைய ஒருவரைத் தூதராக நியமிக்க அனுமதிக்கக்கூடாது என்றும் -

அந்த அமைப்புகள் ஆஸ்திரேலிய அரசிடம் தெரிவித்துள்ளன.

அதேவேளை -

ஜானக பெரேராவின் ஆவணங்களைத் தாம் ஆராய்ந்து பார்த்ததாகவும் -

அவை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளன என்றும் -

ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் அலெக்ஸாண்டர் டவுனர் தெரிவித்துள்ளார்.

வெளியுறவு அமைச்சர் இந்த விடயத்தை ஆளுநரிடம் சமர்ப்பித்துள்ளார். அவரின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் ஜானகபெரேரா தூதராகப் பதவியேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## படையினர் வெளியேறினர்

அரியாலை,மே21

கொழும்புத்துறை மேற்கு, சுவாமியார் வீதியில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்களில் கடந்த சில வாரங்களாக முகாமிட்டிருந்த இராணுவத்தினர் நேற்று ஞாயிற்றுக் கிழமை அப்பகுதியில் இருந்து விலகிச் சென்றுள்ளனர்.

இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து விலகியதை அடுத்து இப்பகுதி மக்கள் தமது வீடுகளைச் சென்று பார்வையிட்டனர். (உ-17)

## அமெ.- தாய்லாந்து ராணுவ ஒத்திகையில் ஸ்ரீலங்காப் படையினர்!

தாய்லாந்தில் நடைபெறும் அமெரிக்க - தாய்லாந்து கூட்டு இராணுவ ஒத்திகையில் இலங்கைப் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த ஐவர் கொண்ட குழு பங்கேற்றுள்ளது என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுடனான உறவு விரிவாக்கல் திட்டத்தின் கீழ், இலங்கை இந்த ஒத்திகையில் பங்கேற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# இணையத் தளங்களில் 'மாவனல்ல' வைரஸ்!

கொழும்பு,மே21

இணையத்தளங்களைச் செயலிழக்கச் செய்யும் கணனி வைரஸ் ஒன்றுக்கு 'மாவனல்ல' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் குறித்து கடந்த வெள்ளிக்கிழமை கணனி வைரஸ்களுக்கு எதிரான மென்பொருள்களைத் தயாரிக்கும் ரஷ்ய நிறுவனமான 'கஸ்பேர்ஸ்கிலாப்' முதன்முதலில் எச்சரிக்கை வெளியிட்டது.

தனது இணையத்தளத்தில் இந்த எச்சரிக்கையை அந்த நிறுவனம் விடுத்தது.

சில மாதங்களுக்கு முன்னர் உலகில் பல கணனிகளைச் செயலிழக்கச் செய்த 'அன்னா கர்னிகோவா' என்ற கணனி வைரஸை உருவாக்கப் பயன்பட்டிருந்த வி.பி.எஸ் வைரஸ் உருவாக்கி என்ற மென்பொருளே தற்போது 'மாவனல்ல' வைரஸை உருவாக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் மேலும் தெரிவித்தது.

'மாவனல்ல' வைரஸ் மின் அஞ்சல் மூலம் இணையத்தளத் தொடர்புள்ள கணனிக்குள் நுழைகிறது.

மாவனல்ல என்று பெயரிடப்பட்டுள்ள அந்த மின் அஞ்சலை திறந்து படித்தால் -

"மாவனல்ல இலங்கையின் அழகிய முஸ்லிம் கிராமம். இந்தக் கொடூரமான சம்பவத்தில் 2 மசூதிகளும், 100 கடைகளும் எரிக்கப்பட்டன. நான் இந்தச் சம்பவத்தை வெறுக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்னால் உங்கள் கணனியைச் சீர்குலைக்க முடியும். ஆனால் அதனை நான் செய்யமாட்டேன். ஏனென்றால் நான் அமைதியை விரும்பும் குடிமகன்" என்று திரையில் ஆங்கிலத்தில் தோன்றும்.

அதேசமயம் கணனியில் சேமித்து வைக்கப்பட்ட கோப்புகளில் 'மாவனல்ல' வைரஸ் தன்னைத்தானே பிரதி செய்துகொண்டு விடுவதால், சேமிக்கப்பட்ட அனைத்துத் தகவல்களும் அழிந்துவிடுகின்றன.(ஐ-ஒ)

## கலந்துரையாடல்

தொழிற் துறைத் திணைக்கள போதனாசிரியர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் மாகாணப் பணிப்பாளர் கலந்துகொள்ள விருப்பதால் போதனாசிரியர்கள் மேற்பார்வையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.


**புலமைப்பரிசில் - 2001**

40 ஆவது பரீட்சையில்
அதி கூடிய புள்ளி பெற்றோர்

| | |
|---|---|
| சு.டினேஸ்சாந் (யா/இ.ஆ.பா.) | - 186 |
| ந.திருத்தணிகன் (யா/இ.ஆ.பா) | - 165 |
| யோ.சரண்யா (சுண்டுக்.ம.க.) | - 162 |
| அ.சுபாங்கி (கொ.இ.ஆ.பா.) | - 161 |
| ஆ.ஜதிகானந் | - 160 |
| பொ.முருகேந்திரா | -160 |

BOND யாழ்நகர் (88054)


## பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்க புதிய கட்டடத் திறப்பு விழா

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் (G.T.Z.) உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மேற்படி சங்கக் கட்டடத் திறப்புவிழா இன்று (21.05.2001) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு (புதிய நேரம்) நடைபெறும்.

**நிகழ்ச்சி நிரல்**

*தலைமை உரை :* திரு. சி.மகேந்திரன் *(சங்கத் தலைவர்)*
*வரவேற்புரை :* திரு. கு.வரதராசா *(சங்கத் தலைவர்)*
*ஆசியுரை :* பிரம்மஸ்ரீ இ.உலகேஸ்வரக் குருக்கள்
*முதன்மை விருந்தினர் :* ஈவகாட் கல்பா *(EBERHARD HALBACH)*
*(G.T.Z. யாழ். புனரமைப்புத் திட்ட தலைவர்)*
*சிறப்பு விருந்தினர்:* திரு.நா.வேதநாயகன்
*(பிரதேச செயலர், வலி.தென்மேற்கு - சண்டிலிப்பாய்)*
*கௌரவ விருந்தினர்கள்:* திரு.மு.பாலசிங்கம்
*(உதவி திட்டமிடல் பணிப்பாளர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)*
திரு.க.ஸ்ரீபதி
*(கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)*
திரு.எஸ்.இராசசிங்கம் *(பிரதம இணைப்பாளர், G.T.Z.)*
திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் *(பிரதம ஆற்றுப்படுத்துநர், G.T.Z.)*
திரு.ஏ.ஸ்ரீகாந்த் *(பொறியியலாளர், G.T.Z.)*
*நன்றியுரை:* திரு.செ.இராசதுரை *(சங்கச் செயலாளர்)*

அனைவரையும் வருகை தந்து இவ்விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- நிர்வாகிகள்,
*கிராம அபிவிருத்திச் சங்கம்.*
*பிரான்பற்று.* (88048)


**நாகம்ஸ்**
சுன்னாகம்
எம்.ஜி.ஆர். (இருவேடங்கள்)
சரோஜாதேவி, நம்பியார்
நடித்த
**எங்க வீட்டுப் பிள்ளை**
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 6.00 (விசேட காட்சி)
(C/16791)

**ராஜா**
யாழ்ப்பாணம்
சரத்குமார், தேவயாணி
மற்றும் பலர் நடிப்பில்
**பாட்டாளி**
23.05.2001 முதல்
உன்னைக் கொடு
என்னைத் தருவேன்
காட்சிகள்: 10.30, 2.30, (புதிய நேரம்)
(C/16894)

**லஷ்சுமி**
இணுவில்
கார்த்திக், லைலா,
மனோரமா, தாமு
நடிப்பில்
**ரோஜாவனம்**
(ரீல்ஸ்)
தினசரி 3 காட்சிகள்
10.30, 2.00, 5.30 (புதியநேரம்)
(88055)


## தவறிவிட்டன

203 - 0718 இலக்கமுடைய ஆட்டோ பெயர்மாற்றப் படிவம், கணனிப் புத்தகம், காப்புறுதிப் புத்தகம், வரிப்பத்திரம் என்பன நேற்று (20.05.2001) ஞாயிறன்று கட்டப்பிராய்க்கும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் **நாகையா - ராஜ் மோகன், ஆட்டோ சங்கம், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (88052)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
**திரு.கந்தையா ஸ்ரீபதி** அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி கந்தையா அன்னம்மா

அவர்கள் 19.05.2001 அன்று காலமானதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.*
(88049)

## வாழ்த்துகின்றோம்

முதலாம் வருட நிறைவைப் பூர்த்தி செய்யும்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியையும் அதன் பீடாதிபதி
**உயர்திரு. கலாநிதி தி.கமலநாதன்**
அவர்களையும் கல்விப் பணியில் பல்லாண்டு காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

- யாழ். மாவட்ட கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கம்.
(88043)

## மரண அறிவித்தல்கள்

### கதிரேசர் ஆறுமுகம் (கோப்பாய்)

பழைய ஆஸ்பத்திரி வளவு, கோப்பாய் தெற்கைச் சேர்ந்தவரும் 16, கடையிற் சுவாமி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய கதிரேசர் ஆறுமுகம் அவர்கள் நேற்று (20.05.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாரதாம்பாள் (கொல்லங்கலட்டி) அவர்களின் அன்புக்கணவரும் வேதநாயகி, பர்வதபத்தினி, சிவப்பிரகாசம் (ஓய்வு பெற்ற வெளிக்கள உத்தியோகத்தர், உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களம்), சிவசுப்பிரமணியம் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற கந்தையா (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) மற்றும் இளையதம்பி (சன்லீம் அட்வரைஸின் சேவிஸ், கொழும்பு), யோகேஸ்வரி (மக்கள் வங்கி, கன்னாதிட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கமலநாயகி (ஆசிரியை), விமலநாயகி (ஆசிரியை), முருகானந்தன் (பொறியியலாளர், கனடா), சிவானந்தன் (விவசாய உத்தியோகத்தர், ஆஸ்திரேலியா), நிர்மலா, சிவனேசன், சிவபாலன், மேகலா, சிவமாலா, பிரணவரூபன் ஆகியோரின் பேரனாரும் கமல்நாத், ஐங்கரன், ரமேஷ், மீனநயனி ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2001) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16, கடையிற் சுவாமி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(88051)

தகவல்:
க.ஆ.சிவப்பிரகாசம்.
(மகன்)

### திருமதி செல்லத்துரை சின்னத்தங்கச்சி

குருசுமதவடி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லத்துரை சின்னத்தங்கச்சி நேற்று (20.05.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் செல்லத்துரையின் அன்பு மனைவியும் ரதீஸ்வரன்(கனடா), இராஜேஸ்வரன்(ஆனைக்கோட்டை), ரதீஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தபேந்திரா, அனுடா, பரஞ்சோதி (குடும்பநல உத்தியோகத்தர்,யாழ்.மாநகரசபை ஆகியோரின் பாசமிகு மாமியாரும் றூபஸ், டியங்கா, ராஜ்மீனன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.05.2001) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக காக்கைதீவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*குருசுமதவடி, ஆனைக்கோட்டை.* (88053)

தகவல்:
இராஜேஸ்வரன்(வவி)
(மகன்)


## திருமண அழைப்பு

உ

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான விஷு வருடம் வைகாசி மாதம் ஒன்பதாம் நாள் *(23.05.2001)* புதன்கிழமை பகல் *1.52* மணி முதல் *3.28* மணி வரை வரும் கன்னி லக்கினமும் ரோகினி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சுபாஸ்சந்திரன்**
அவர்களுக்கும்



எமது ஏகபுத்திரி
திருநிறை செல்வி
**மகாதேவி**
அவர்களுக்கும்

இறைவனின் திருவருள் துணைகொண்டு தாவடி ஸ்ரீ வட பத்திரகாளி தேவஸ்தானத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்**

**திரு.திருமதி அ.திருஞானசம்பந்தர்**
*ஏழாலை தெற்கு,*
*சுன்னாகம்.*

**திருமதி கனகம்மா அரியகுட்டி**
*வாகையடி மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி,*
தற்காலிக முகவரி:
*வேம்படி முருகமூர்த்தி கோயிலடி,*
*தாவடி தெற்கு, கொக்குவில்.*

(C/16790)

## அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடந்த

# அமைச்சு அலுவலகத்தில் ஈ.பி.டி.பியினர் காவலா?

### குற்றச்சாட்டை மறுக்கிறார் தவராஜா

யாழ்ப்பாணம்,மே21

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அகியவற்றில் தாம் பங்குபற்றாததற்காக தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அவிநாயகமூர்த்தி தெரிவித்ததாகக் குறிப்பிட்டு நேற்றைய உதயனில் வெளியான காரணங்கள் குறித்து ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.தவராஜா பதிலளித்துள்ளார்.

இது தொடர்பாக சி.தவராஜா எம்.பி. தெரிவித்திருப்பதாவது:-

ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு முன்னால் உள்ள கட்டடத்தில் இந்தக் கூடடங்கள் நடைபெற்றன என்றும் அங்கு பொதுவான விடயங்களைக் கதைப்பதற்கு தமக்குப் பாதுகாப்பு இருக்காது என்றும் ஈ.பி.டி.பியினர் ஆயுதங்களுடன் தம்மைப் பரிசோதிப்பதை தாம் விரும்பவில்லை என்றும் விநாயகமூர்த்தி தெரிவித்திருக்கின்றார்.

இக்கூட்டம் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்விவகார அமைச்சின் யாழ். அலுவலகத்தில்தான் நடைபெற்றது - ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் அல்ல.

அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமையவே இந்த அலுவலகம் திறக்கப்பட்டது.

இந்த அமைச்சு அலுவலகத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் காவலில் ஈடுபடுவதுமில்லை; ஈடுபட்டிருக்கவுமில்லை. பொலீஸாரும் இலங்கைப் படையினருமே காவலில் இருந்தனர். கூட்டத்திற்கு வந்திருந்த யாழ்.மேயர் ரவிராஜும் பத்திரிகையாளர்களும் இதற்குச் சான்று பகர்வர்.

தனது சொந்தப் பாதுகாப்புக்கு இலங்கைப் பொலீஸாரை தம்முடன் வைத்திருக்கும் விநாயகமூர்த்தி எம்.பி., அதே பொலீஸாரின் பாதுகாப்பின் கீழ் நடைபெற்ற கூட்டத்துக்கு வருவது தமக்குப் பாதுகாப்பில்லை என்று கூறுவது பொருத்தமற்றது.

தமக்குத் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் 25 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் -

எவரது அனுமதியும் இன்றி அதனைத் தமது மாவட்டத்தில் செலவளிப்பதற்கான அதிகாரத்தை நாடாளுமன்றம் தமக்குத் தந்துள்ளதாகவும்-

எனினும் தனது திட்டங்கள் அங்கீகரிக்கப்படவில்லை எனவும் -அவர் கூறியுள்ளார். அதுவும் உண்மையற்றது; அடிப்படையில் தவறானது.

ஒரு தேர்தல் மாவட்டத்தில் உள்ள எம்பிக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒரு எம்.பிக்கு 25 லட்சம் ரூபா என்ற அடிப்படையில் மொத்த நிதி ஒதுக்கப்படுகின்றது. இது தொடர்பாக திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சு பல சுற்றுநிருபங்களை வெளியிட்டுள்ளது. எந்த ஒரு எம்.பிக்கும் உரியது என்று அடிப்படையில் தனியாக நிதி ஒதுக்கப்படுவதில்லை எந்தெந்தத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவது என்பதை மாவட்ட அபிவிருத்திக் குழுதான் தீர்மானிக்கும். அதற்குத் தேவையான முன்மொழிவுகளை எம்.பிக்கள் மாவட்ட அபிவிருத்திக் குழுவில் முன்வைக்கலாம். ஆனால் தீர்மானம் எடுப்பது மாவட்ட அபிவிருத்திக் குழுதான்.

அந்த வகையில் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழு கூடி முடிவுகளை எடுத்துள்ளது.

- இப்படி தவராஜா எம்.பி. மேலும் விளக்கியுள்ளார்.

(உ)

## சமாதான முயற்சிகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"நோர்வேத் தூதுக்குழு அங்கு போக இருக்கையில் யார் இந்தத் தாக்குதலை நடத்தியிருந்தாலும் பாதுகாப்பு அமைச்சு அது குறித்து ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது" - என்று பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது இது தொடர்பாக ஜனாதிபதியின் மெய்ப்பாட்டு உணர்வை வெளிப்படுத்தியது.

புலிகளின் அறிவிப்புப்படி இச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஆனால் வன்னியில் இருந்து கிடைத்த வேறு தகவல்கள் பஜரோவில் இருந்த ஏழு பேருமே உயிரிழந்துள்ளனர்; பஜரோ சின்னாபின்னமாகிவிட்டது - என்று தெரிவித்தன.

வெள்ளிக்கிழமை வவுனியாவை அண்டிய பிரதேசத்தில் பல தாக்குதல்கள் நடந்தன. 12 படையினர் உயிரிழந்தனர்; 16 படையினர் காயமடைந்தனர்.

புலிகள் அறிவிக்காவிட்டாலும் தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் முயற்சிக்குப் பதிலடியே வெள்ளிக்கிழமை நடந்த தொடர் தாக்குதல்கள் என்பதை சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் புலனாய்வு வட்டாரங்களும் ஒப்புக்கொள்கின்றன.

இந்தப் பின்னணியில்தான் சொல்ஹெய்மின் வன்னி விஜயம் முடிவுற்றுள்ளது. ஆனால் அந்த விஜயத்தின் பலாபலன்கள் ஊக்கம் அளிப்பவையாக இல்லை.

தங்கள் அமைப்பு மீதான தடையை நீக்க வேண்டும் என புலிகள் வலியுறுத்துவது நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டது.

மற்றைய விடயங்களில் இரு தரப்புகளுக்கும் இருந்த இடைவெளியைக் குறைப்பதில் சொல்ஹெய்ம் ஓரளவு வெற்றி பெற்றுள்ளார்.

புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம் பற்றிய விவகாரத்தினால் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைக்கு நோர்வே ஏற்பாட்டாளர்கள் தீர்வு ஒன்றைக் காணும்வரை-

இராணுவ நிலைமைகளில் தளர்வு ஏற்பட வாய்ப்பில்லை என்பது இப்போது உறுதியாகிவிட்டது.

ஏற்கனவே நாம் குறிப்பிட்டபடி, கடந்த சில மாதங்களாக ஆயுதங்களைக் குவிப்பதில் புலிகள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். இந்த ஆயுதக்குவிப்பு அவர்களது வலுவை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் யுத்தத்தின் தீவிரத்தையும் அதிகரிக்கச் செய்யும். அத்தோடு யுத்தப் பிரதேசத்துக்கு அப்பாலும் - குறிப்பாகத் தலைநகரில் - புலிகளினால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தலையும் அதிகரிக்கச் செய்துள்ளது.

கடந்த பல மாதங்களாக நிலவிய சமாதான எதிர்பார்ப்பை இப்போதைய முட்டுக்கட்டை நிலை தவிடுபொடியாக்கிவிட்டது.

எனினும் தொடர்ந்து தமது சமாதான முயற்சியில் தீவிரமாக ஈடுபடப் போவதாக நோர்வே ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

அது வெற்றியளிக்கும் வரை - ஏற்கனவே நவீன மயப்படுத்தப்பட்ட பாதுகாப்புப் படைகள், கடந்த பல வாரங்களாயும் மாதங்களாயும் தம்மை நவீன மயப்படுத்திய எதிரியை களத்தில் சந்திக்க இப்போது தயாராக வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

இலங்கையைப் பொறுத்த வரை பகலுக்குப் பின் இரவு என்பதைப் போல சமாதானமும் யுத்தமும் மாறி மாறிவருவது சகஜமாகிவிட்டது.(உ)

## ஹொரவப்பொத்தானை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை 5.30 மணிக்கு இடம்பெற்ற மோதலில் 2 புலிகள் உயிரிழந்திருப்பதாக இராணுவத்தரப்பு அறிவித்துள்ளது. (உ-6)

## யுத்தத்தினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெறுக்கின்றார்கள்.

சமாதானத் தீர்வுகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களாக சில பௌத்த பிக்குகளே இப்போதும் செயற்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அகிம்சை வழியே தெரியாது. அவர்களை இனங்கண்டு இந்தச் சமூகத்தில் இருந்தே அவர்களை ஒதுக்கி வைக்கவேண்டும் - என்றார் அவர். (உ-6)

## சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,மே21

அரச சேவையிலுள்ள கீழ் உழைப்பு பட்டதாரிகள் இணைந்து சங்கம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

அரச சேவையில் சேர்ந்த பின்னர் பட்டம் பெறுபவர்களுக்கு உரிய பதவிகள் கிடைப்பதில்லை என்றும்-

அந்த விடயத்தை அரசுக்கு தெரியப்படுத்தி நிவாரணம் பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு இந்தச் சங்கம் அமைக்கப்படுகின்றது என்றும் -

சங்கத்தின் செயலாளர் கு.பற்குணராசா தெரிவித்தார்.

(ஜ-3)

## விடுதலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புத் தரப்பு, சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுடன் கலந்துரையாடி இறுதி முடிவு எடுக்கப்படவிருப்பதாகவும் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பான இறுதி முடிவை அரசுத் தரப்பு நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்முக்கு தெரியப்படுத்திய பின்னர் -

அவர் புலிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி தமது முயற்சிகளைத் தொடர்வார் என்று கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3)

எமது நேற்றைய வீடியோ CD வெளியீடு

அசத்தல்

இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு

விசுவின் சிகாமணி, ரமாமணி

வீடியோ விமல் யாழ்ப்பாணம். (C/16702)

# 12ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் நாகலிங்கம் அப்பையா (மணக்கும்பான்)



*திதி: 21.05.2001 (திங்கட்கிழமை)*

**அன்பின் பிறப்பிடமாய்**
**பாசத்தின் உறைவிடமாய்**
**திகழும் நீங்கள் இம்மண்ணுலகை விட்டுச் சென்று**
**வருடங்கள் பன்னிரண்டு சென்றாலும்**
**ஐயா உங்கள் நினைவு**
**என்றும் எங்கள் உள்ளத்தில் நிலைத்து நிற்கும்!**

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னை மடியில் 05-08-1934

ஆண்டவன் அடியில் 01-05-1989

*241G, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(87822)

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.05.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.